வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 15.01.2022 சனிக்கிழமை இதழ் : 41 பக்கங்கள் : 16




## எரிபொருள் தட்டுப்பாடு எவ்வேளையும் வரலாம்!

### அமைச்சர் உதய கம்மன்பில



கொழும்பு, ஜன. 15

எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்று முன்னர் நான் கூறிவந்த போதும் இப்போதைய நிலைமையில் என்னால் அவ்வாறு உறுதியாக கூறமுடியாது. அதனால் இந்த மாதத்தில் எவ் வேளையிலும் எரிபொருளுக்கான தட்டுப்பாடு ஏற்படுவதற்கான அபாயம் இருக்கின்றது என எரி சக்தி அமைச்சர்

15

## தேவாலயங்களில் அச்சுறுத்தல் நிலைமையை தோற்றுவிக்க சதி!

### கர்தினால் மல்கம் ரஞ்சித் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 15

பொரளை சகல பரிசுத்தவான்கள் தேவாலயத்தில் கைகுண்டுகள் மீட்கப்பட்ட விவகாரத்தில் பொலிஸாரின் அச மந்த செயல்பாடுகளை முற்றாக நிராகரிப்பதாகத் தெரிவித்த பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, இதனை தேவாலயங்களில் அச்சுறுத்தல் நிலைமையொன்றை தோற்றுவிப்பதற்காக முன்னெடுக்கப்படும் ஒரு சதியாகவே கருதுவதாகவும் கூறினார்.

பொரளையிலுள்ள

15





யாழ்.குடாநாட்டில் நேற்று தைப்பொங்கல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. யாழிலுள்ள ஆலயங்களில் அதிகாலை முதல் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. வீடுகளிலும், சமய சமூகப் பொது நிறுவனங்களிலும் இடம்பெற்ற பொங்கல் கொண்டாட்டங்களில் மக்கள் உற்சாகத்துடன் பங்குபற்றினர். (அ)

# பொருளாதார பின்னடைவால் நாட்டில் சட்டவாட்சிக்கு பங்கம்

### உடனடி தீர்வு வேண்டும் என்கிறது இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

கொழும்பு, ஜனவரி 15

“நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவு பெரும்பாலும் சட்டவாட்சிக்கும் நிர்வாகத்துக்கும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். எனவே தற்போதைய சூழ் நிலையில் மேலும் தாமதமடையாமல், பொருளாதாரப் பிரச்னைகளுக்கு தீர்வு வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.”

-இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் ரஜீவ் அமரசூரிய.

15



## உழவு இயந்திரம் தடம் புரண்டதில் சில்லுக்குள் நசிந்து விவசாயி பலி!

### புத்தூரில் பொங்கலன்று துயரச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 15

புத்தூர் பகுதியில் இரு சக்கர உழவு இயந்திரத்தில் உழுதுகொண்டிருந்த குடும்பஸ்தர் உழவு இயந்திரம் தடம் புரண்டதில் சில்லுக்குள் நசியுண்டு உயிரிழந்தார்.

இந்த சம்பவம் நேற்று மதியம் தோட்ட நிலத்தை உழுதும்போது இடம் பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் புத்தூர் - கலைமதி பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய மூன்று

15

## இந்த ஆட்சி ஏற்கனவே கவிழ்ந்துவிட்டது!

### சுமந்திரன் எம்.பி. கூறுகிறார்



வடமராட்சி, ஜன. 15

இந்த ஆட்சி ஏற்கனவே கவிழ்ந்துள்ளது எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தனது அல்வாய் கிழக்கு வடமராட்சி பிரதேச அலுவலகத்தில் இடம்பெற்ற தைப்பொங்கல் விழாவில் கலந்து கொண்டபின் ஊடகங்களுக்கு

15

## “கொரோனா தொற்று அச்சுறுத்தலில் நாடு!”

கொழும்பு, ஜன. 15

அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய நாடுகள் மற்றும் இந்தியாவை போன்று இலங்கையும் மீண்டும் கோவிட்-19 பரவல் அதிகரிக்கக்கூடிய அச்சுறுத்தல் நிலைமையிலேயே உள்ளது. எனினும், அந்த அச்சுறுத்தலுக்கு உள்ளாகாமலிருப்பதற்கு கோவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது அத்தியாவசியமானதாகும் என்று விசேட மருத்துவ நிபுணர் தீபா கமகே தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

ஒமைக்ரோன் தொற்றால் ஏற்படக் கூடிய அச்சுறுத்தலிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காகவே 11ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையான ஒரு வார காலத்தில் விரைவாக தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்

15

## ரயில்நிலைய அதிபர்களின் வேலைநிறுத்தம் நிறைவு!

கொழும்பு, ஜன. 15

ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் வேலைநிறுத்தப் போராட்டத்தை நேற்று மாலை 6.30 மணியுடன் வாபஸ் பெற்றது.

எவ்வாறாயினும், ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்புவதற்கு கால அவகாசம் எடுக்கும் என சங்கம் தெரிவித்

15

## வவுனியா விபத்து 12 பேர் காயம்!

வவுனியா, ஜன. 15

ஏ-9 வீதியின் வவுனியா - பூனாவை பகுதியில் நேற்று அதிகாலை அதிசொகுசு பேருந்து உட்பட மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 12 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பூனாவை பகுதி

15

## தளபதி ஜெகத் ஜெயசூரியவை கைது செய்து விசாரியுங்கள்!

### 7 மனித உரிமைகள் அமைப்புகள் வலியுறுத்து

லண்டன், ஜன. 15

பிரிட்டனுக்கு வரவுள்ள போர் குற்ற சந்தேகநபரான முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரியவை அரசாங்கம் கைது செய்து விசாரிக்க வேண்டும்.

அத்துடன், இறுதிப் போரின்போது கட்டளை வழங்கும் அதிகாரத்திலிருந்த இராணுவ ஜெனரல்களுக்கு எதிராக தடை விதிக்க வேண்டும் என்று ஏழு சர்வதேச மற்றும் பிரிட்டன் அமைப்புக்கள் கூட்டாக பிரிட்டனை வலியுறுத்தியுள்ளன.

பிரிட்டன் அரசாங்கம் சர்வதேச “மெக்னிற்ஸ்கி” சட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள

15

## மாதகல் பஸ் உரிமையாளர் குளத்தினுள் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 15

தனியார் பஸ் உரிமையாளர் ஒருவர் மூன்று நாள்களாகக் காணாமற்போன நிலையில் சங்கானை மண்டிகைக் குளத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாதகலைச் சேர்ந்த கடம்பன் (வயது-38) என்பவரே உயிரிழந்துள்ளார்.

உள்ளூர் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்

15

# 13ஆம் திருத்தம் நடைமுறைக்கு வரட்டும் அதிலிருந்து இருப்புகளை பாதுகாப்போம்!

## கஜேந்திரகுமார் எம். பி. தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜன. 15**

**“முதலில் 13ஆவது திருத்தம் நடைமுறைக்கு வரட்டும். அதிலிருந்து இப்போதுள்ள இருப்புக்களை நாம் பாதுகாப்போம். ஆனால், இது தீர்வாகாது என்று கூறி வருகின்றோம்.” என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.**

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் கூறினார். இந்த சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

‘சமஷ்டி சமஷ்டி’ என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கூறிக்கொண்டு, ஒற்றை ஆட்சிக்குள் தமிழ் மக்களை அமிழ்த்துவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. நாம் என்ன நினைக்கிறோம், முதலில் 13ஆவது திருத்தம் நடைமுறைக்கு வரட்டும். அதிலிருந்து இப்போதுள்ள இருப்புக்களை நாம் பாதுகாப்போம்.

ஆனால், இது தீர்வாகாது என்று கூறி வருகின்றோம்.

ஆனால், கூட்டமைப்பு சமஷ்டி என்று கூறிக்கொண்டு, தேர்தல் நிறைவடைந்த பின்னர்



தமிழ் இன நீக்கத்தை செய்யும் வகையில்,ஒற்றை ஆட்சிக்குள் முடக்கும் செயல்பாட்டை செய்து வருகிறது. 13 ஆவது திருத்தத்தை மக்கள் ஆதரிக்கும் வகையில்,என்ன செய்யலாம், என்ற நாடகம் இங்கு நடைபெறுகிறது. 34 வருடங்களாக நாம் மறுத்த வந்த இந்த திருத்தத்தை, இனப் பிரச்னைக்கு தீர்வாக நம்ப வைக்கும் நாடகமே இங்கு நடைபெறுகிறது.

நான்காவது, அரசியல் திருத்தத்தை ஒப்பு கொள்ள வைப்பதற்கு, நாம் கேட்ட திருத்தத்தை தந்து விட்டோம் என்று எங்கள் வாயால் சொல்ல வைப்பதற்கு அரசு முனைகிறது. இதை விடுத்து சி.வி. விக்னேஸ்வரன் அயோக்கியதனமாக ,13 ஆவது திருத்தம் தொடர்பில் தாறுமாறாக கூறி வருகின்றார். இதை இந்திய முகவர்கள் எமக்கு திணிப்பதற்கு முயற்சிக்கின்றனர். மக்கள் இதை விளங்கி கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

## விளையாட்டு போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும்

மானிப்பாய், ஜன. 15

பண்டத்தரிப்பு - பிரான்பற்றில் மாபெரும் விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று காலை 6 மணி முதல் இடம்பெறவுள்ளன.

பிரான்பற்று பெரியவளவு முருகன் ஆலய முன்றலில் இடம்பெறும் இந்தப் போட்டியில் 14 வகையான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

சரஸ்வதி சன சமூக நிலையத்தால் நடத்தப்படும் இந்தப் போட்டி காலை 6 மணிக்கு மரதன் போட்டியுடன் ஆரம்பமாகும். இதைத் தொடர்ந்து 60 கிலோமீற்றர் தூர சைக்கிள் ஓட்டப் போட்டியும், 50 வயதுக்கு மேற்பட்டோருக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும் இடம்பெறவுள்ளன.

இதைத் தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வு மதியம் 1.30 மணிக்கு பிரான்பற்று பெரியவளவு முருகன் ஆலய முன்றலில் இடம்பெறும். வெற்றி பெற்றவர்களுக்கு பசுமைத் திட்டத்தின் ஸ்தாபகத் தலைவர் புலம்பெயர் சமூகஜோதி சி. ஜெயக்குமாரின் நிதிப்பங்களிப்பில் சைக்கிள்,ரீ, வி , மின்விசிறி. வூபர் இசை செற். ரைஸ்குக்கர் உள்ளிட்ட பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

பிரான்பற்று சரஸ்வதி சன சமூக நிலையத் தலைவர் அ. மங்களேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினர்களாக வலி. தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் அ.ஜெபனேசன், காரைநகர் பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செல்வ ராஜா ரமேஷ் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-5)

## மருத்துவமனை முன்பாக விபத்து கிண்ணியாவில் ஒருவர் உயிரிழப்பு

கிண்ணியா, ஜன. 15

திருகோணமலை- கிண்ணியா தள வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்ற வாகன விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் மதியம் ஒரு மணியளவில் இடம்பெற்றது. இந்த விபத்தில் உயிரிழந்தவர் இரு பிள்ளைகளின் தந்தையான கிண்ணியா-ஆலிம் வீதியைச் சேர்ந்த அலியார் (65வயது) என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கொரோனா தடுப்பூசி பெற்றுவிட்டு வீடு திரும்புவதற்காக தனக்கு உதவியாக வந்தவருடன், வைத்தியசாலை முன்புற வீதியில் நடந்தவரை கார் ஒன்று மோதித் தள்ளியது.

இதில், இருவரும் படுகாயமடைந்தனர். மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது மருத்துவமனைக்கு முதியவர் மாற்றப்பட்டபோது அவர் வழியிலேயே உயிரிழந்தார்.

முதியவரை மோதித் தள்ளிய கார் பிரபல சட்டத்தணி ஒருவருடையது என்றும், விபத்தை ஏற்படுத்திய சட்டத்தரணியும் காயத்துக்காக சிகிச்சை பெற்றார் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

## சதொசவில் 3,998 ரூபாய்க்கு 20 அத்தியாவசிய பொருட்கள்!

கொழும்பு, ஜன. 15

“10 கிலோ கிராம் சம்பா அரிசி உள்ளிட்ட 20 அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய நிவாரணப் பொதி ஒன்றை 3 ஆயிரத்து 998 ரூபாய்க்கு சதொச நிறுவனங்கள் ஊடாக பொது மக்கள் பெற்றுக்கொள்ள முடியும்”, என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், நாட்டு அரிசியை 105 ரூபாய்க்கும் கீரி சம்பாவை 130 ரூபாய்க்கும், பச்சைப் பயறு 225 ரூபாய்க்கும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## யானையின் மீது மோதியது வான் சாரதியின் நிலை கவலைக்கிடம்

கொழும்பு, ஜன. 15

காட்டு யானை ஒன்றின் மீது வான் ஒன்று மோதியதில் வானின் சாரதி பலத்த காயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பலாங்கொடை வெள்ளவாய வீதியில் நெலுல்ல பிரதேசத்தில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்த விபத்தினால் வானுக்குள் அகப்பட்ட சாரதி பிரதேச மக்களால் மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

## இப்படியும் நடக்கிறது...!

அவர் ஓர் அரச நிறுவனத்தில் இடைநிலை அதிகாரி. ஒரு தேர்தலில் முக்கிய வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவாக தீவிரமாக தேர்தல் பணியாற்றியவர்.

அவர் ஆதரித்து தேர்தல் பணியாற்றிய அந்த வேட்பாளர் வெற்றிபெற்று பதவியேற்றதும், அவர் அவரை முதன்முதலில் சந்தித்தபோது, ஒரு வேண்டுகோள் விடுத்தாராம்.

எப்போதுமே அவர் பணியாற்றும் அந்த முக்கிய அரச நிறுவனத்திற்கு வெளியில் இருந்துதான் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்படுவது வழமையானது.

அந்த நிறுவனத்தற்கு மட்டுமல்ல இது எல்லா அரச நிறுவனங்களுக்கும் பொருத்தமானது.

இந்த தடவையாவது பணிப்பாளர் நாயகத்தை தமது நிறுவனத்தில் பணியாற்றும் சிரேஷ்ட அதிகாரிகளில் ஒருவரை நியமிக்கவேண்டும் என்பதுதான் அவரது கோரிக்கை.

அவ்வாறு தான் கோரிக்கை விடுக்கின்றபோது, அவர் தன்னிடமே யாரை நியமிக்கலாம் என்று கேட்பார், அப்போது தனக்கு நெருக்கமான உயர் அதிகாரி ஒருவரை நியமிக்க கேட்கலாம் என்பது அவரது எதிர்பார்ப்பு.

மறுநாள் அவருக்கு அந்த தலைவரின் அலுவலகத்திலிருந்து தொலைபேசியில் அழைப்பு விடுத்த அதிகாரிகள், அவரை தலைவரின் அலுவலகத்திற்கு வருமாறு பணித்தனர்.

இவர் அங்கு வந்தபோது, அவரது நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்காக அவர் நியமிக்கப்பட்டதற்கான நியமனக்கடிதம் அவர் கையில் வழங்கப்பட்டபோது இவருக்கு ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சி.

இது அவர் கனவிலும் நினைத்திருக்காத ஒன்று.

அந்த நிறுவனத்தில் இடைநிலை அதிகாரி அவர். அவர் ‘சேர்’ போட்டு பேசிய அவருக்கு மூத்த அதிகாரிகள் எல்லோரும் இனி அவருக்கு சேர் போடப்போகிறார்கள்.

இப்படித்தான் நமது நாட்டில் முக்கிய பதவிகளுக்கு ஆட்கள் நியமிக்கப்படுகின்றார்கள் என்பதை அறிந்தபோது, இந்த ஊர்க் குருவிக்கு ஒன்றும் ஆச்சரியம் வரவில்லை.

நமது அரச நிறுவனங்கள் எப்படி இயங்குகின்றன என்பதை தெரிந்தவர்களுக்கு அது ஒன்றும் ஆச்சரியமானதல்ல.

கடந்த சில நாட்களாக எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸா வடக்கு மாகாணத்தில் அரசியல் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார்.

தெற்கிலிருந்து ஒரு முக்கிய அரசியல் தலைவர் ஒருவர் இத்தனை நாட்கள் தொடர்ச்சியாக வடக்கில் நின்று மக்களைச் சந்தித்தது இதுவே முதல்தடவையாக இருக்கும்.

அதுமாத்திரமன்றி, சஜித் பிரேமதாஸா மற்றுமொரு சாதனையையும் செய்து முடித்திருக்கிறார்.

இதுவரை அரசியல் ரீதியான பயணங்களில் எல்லாம் எல்லாத் தலைவர்களுமே தனியாகவே விஜயம் செய்வார்கள். ஆனால், சஜித் தனது மனைவி சகிதம் வடக்கை சுற்றி வந்து மற்றுமொரு சாதனையைச் செய்திருக்கிறார்.

சஜித்தின் அரசியலில் அவரின் மனைவி ஆதிக்கம் செலுத்துகிறாரா என்பது தெரியவில்லை. அல்லது அவரும் எதிர்காலத்தில் அரசியலில் ஈடுபடவிரும்புகின்றாரா என்பது போகப்போகத்தான் தெரியவரும். தொழில் ரீதியாக மருத்துவரான அவர், நீண்டநாட்கள் வடக்கில் சஜித் பயணம் செய்ததாலும் அவருடன் இணைந்திருக்கலாம்.

அவரது விஜயத்தில் இன்னுமொரு சாதனையைச்செய்தார்.

அதாவது, இன்னுமொரு கட்சி ஒன்றின் தலைவரை தனது ஐக்கிய மக்கள் சக்தி என்ற கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளராக அறிவித்திருந்தார்.

ஏற்கனவே, ஐக்கிய மக்கள் சக்தியை பலப்படுத்துவதற்காக தாம் உருவாக்கிய ஜாதிக ஹெல உருறுமய என்ற கட்சியையேவிட்டு வெளியேறிய சம்பிக்க ரணவக்கவுக்கு கட்சியில் எந்தவித பதவியையும் வழங்காமல் இழுத்தடித்துவரும் அவர், வடக்கில் வைத்து இன்னுமொரு கட்சியின் (அது கட்சியா என்று கேட்டுவிடாதீர்கள். அப்படித்தான் அவர்கள் சஜித்தை வரவேற்று நடத்திய கூட்டத்திலும் சொன்னார்கள்) தலைவரை தனது யாழ்ப்பாண அமைப்பாளராக நியமித்தார்.

அந்த அமைப்பாளர் தான் தனக்கு - தன் கட்சிக்கு பொருத்தமானவர் என்று சஜித் நினைத்திருந்தால், அவர் தனது ‘திறமையை’ மற்றுமொரு தடவை நிரூபித்திருப்பதாகவே யாழ்ப்பாண மக்கள் கருதுவார்கள்.

நாடு பல்வேறு நெருக்கடிகளால் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்க, இன்று மக்கள் இருக்கின்ற மனநிலையில் எதிர்க் கட்சிகளில் உள்ள தலைவர்கள் தமது ஆளுமையை நிரூபித்திருந்தால், இன்று இந்த அரசு பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்திருக்கும்.

அரசாங்கத்தை மாற்றுவதற்கு மக்கள் தயாராகிவிட்டார்கள். ஆனால், அவர்களை வழிநடத்த தலைவர்தான் இல்லை என்று பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா அண்மையில் தெரிவித்திருந்தார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக தமிழ் மக்கள் வாக்களிக்கும் மனநிலையில் இருந்ததால், பிரசாரம் செய்யாமலே சஜித், தமிழ் மக்களின் வாக்குகளை அள்ளிச் சென்றார்.

ஆனால், நிலைமை அப்படியே தொடரப்போவதில்லை. தெற்கில் மக்களின் பார்வையை ஈர்த்துவரும் ஜே. வி. பி.க்கு தமிழ் மக்களின் கணிசமான ஆதரவு உண்டு என்பதையும் சஜித் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும்.

தான் தன்னோடு கூடவைத்திருப்பவர்கள் தனக்கு கிடைக்கக் கூடிய வாக்குகளைக்கூட இல்லாமல் செய்துவிடுவார்களா என்பதை யும் அவர் கவனத்தில் கொள்ளவேண்டும்.

கொள்ளுவார் என்று நம்புவதற்கான எந்த அறிகுறியையும் இதுவரை காணவில்லை!

**- ஊர்க்குருவி**

ஈழநாடு
Eelanadu
15.01.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், தை 02

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

## 13 ஐ எதிர்ப்பவர்கள்?

தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து, இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதும் முயற்சி ஆரம்பித்த நாளிலிருந்து, 13 தொடர்பில் சலசலப்புக்கள் ஏற்படத் தொடங்கியன. இந்த சலசலப்புக்களில் ஏதாவது பொருளிருக்கின்றதா? 13ஆவது திருத்தச்சட்டம் இலங்கையின் அரசியல் யாப்பில் இருக்கின்ற ஒரு விடயமாகும். அதாவது, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையின் அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட ஒரு சீர்திருத்தமாகும். இந்த திருத்தத்தின் அடிப்படையில் இலங்கைக்கு அறிமுகமானதே மாகாண சபை முறைமை. 1988, நவம்பரில், இணைந்த வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கான முதலாவது தேர்தல் இடம்பெற்றது.

அந்த மாகாண சபையின் ஆயுள் ஓராண்டுடன் முடிவுற்றது. இத னைத் தொடர்ந்து 20 வருடங்கள் மாகாண சபை தேர்தல் வட, கிழக்கில் இடம்பெறவில்லை. 2008இல் கிழக்கு மாகாண சபை தேர்தல் இடம்பெற் றது. இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடவில்லை. ஆனால், 2012இல் இடம்பெற்ற கிழக்கு மாகாண சபை தேர்தலில் கூட்டமைப்பு போட்டியிட்டது. பின்னர் 2013 இல் இடம்பெற்ற வடக்கு மாகாண சபை தேர்தலில் நீதியசரர் விக்னேஸ்வரன் தலைமையில் கூட்டமைப்பு போட்டியிட்டது. இரண்டு தேர்தல்களிலும் கூட்டமைப்பிற்கு மக்கள் பெரும் ஆதரவை வழங்கியிருந்தனர். மாகாண சபை முறைமையையும் உச்சளவில் பயன்படுத்த வேண்டும் என்னும் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை மக்கள் ஆதரித்தனர்.

இந்த பின்னணியில் சிந்தித்தால், 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் ஆரவாரமாக விவாதிப்பதே ஒரு தேவையற்ற விடயமாகும். ஏனெனில், இது ஒரு பழைய விடயம். ஒரு கட்சி ஆதரிப்பதை, பிறிதொரு கட்சி எதிர்ப் பது தேர்தல் சந்தையில் இடம்பெறும் சாதாரண விடயமாகும். தற்போது 13ஆவது திருத்தச் சட்டத்தை ஒரு சிறு குழுவினர் எதிர்ப்பதும்கூட, அவர்களின் தேர்தல் வேலைத் திட்டத்தின் ஒரு பகுதிதான்.

ஏனெனில், பெரும்பாலான கட்சிகள் ஓரணியாக நிற்கின்ற சூழலில், அவர்களை விடவும் தாங்கள் சரியானவர்கள் என்று காண்பிக்க முற்படுபவர்கள், 13 எதிர்ப்பை கையிலெடுத்திருக்கின்றனர். புதிய அரசியல் யாப்புக்குள் 13ஆவது திருத்தச்சட்டத்தை இணைப்பதற்கான சதியொன்று இடம்பெற்று வருவதாக கஜேந்திரகுமார் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தொடர்சியாக குற்றம் சாட்டி வருகின்றது. அவ்வாறாயின் புதிய அரசியல் யாப்புக்குள் 13இலுள்ள நல்ல அம்சங்கள் உள்ளடக்கக்கூடாது என்பதா இவர்களின் நிலைப்பாடு? அவ்வாறாயின் தமிழ் மக்களுக்கு எதுவும் இந்த நாட்டில் மிச்சம் வைக்கப்படக்கூடாது!

உண்மையில் இவர்கள் என்ன கூறு முற்படுகின்றனர்? 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றிலுமாக இல்லாமலாக்குவதன் மூலம், ஓரளவு தமிழ் மக்களுக்கு எஞ்சியிருப்பவற்றையும் இல்லாதொழிக்க வேண்டும் என்பதுதான், தென்பகுதி சிங்கள பௌத்த கடும்போக்கு சிங்கள சக்திகளின் நிலைப்பாடாகவும் இருக்கின்றது. இலங்கையின் அரசியல் யாப்பு ஒற்றையாட்சி யாப்புத்தான். எனவே ஒற்றையாட்சி யாப்பிற்குள் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள் அனைத்தும் ஒற்றையாட்சிக்கு உட்பட்டதாகவே அமைந்திருக்கும். இதனை கண்டுபிடிப்பதற்கு அபூர்வ அறிவு தேவையில்லை. இது அனைத்து மக்களுக்கும் தெரிந்த விடயமாகும். இதனை மக்கள் தெளிவாக அறிந்திருந்ததனால்தான், மாகாண சபை தேர்தலில் கூட்டமைப்பிற்கு பெரும் ஆதரவை வழங்கியிருந்தனர். எனவே இப்போது 13 தொடர்பில் புதிதாக பேச எதுவுமில்லை.

ஆனால், இவ்வாறு 13 என்றவுடன் கூச்சலிடும் குழுவினர், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை ஆதரித்து பேசுகின்றனர். சர்வதேச அழுத்தங்களின் மூலம் தமிழ் மக்களுக்கு சமஷ்டித் தீர்வு வருமென்று வாதிடுகின்றனர். ஆனால்,, இறுதியாக கொண்டுவரப்பட்ட 46ஃ1 தீர்மானத்தில் என்ன இருக்கின்றது?

13ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையிலான அரசியல் தீர்வு தொடர்பிலும், மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்துவது தொடர்பிலுமே குறித்த பிரேரணை வலியுறுத்துகின்றது.

13ஐ ஆதரித்து பேசுபவர்களை இந்திய முகவர்களென்று கூறுபவர்கள், மறுபுறம் - 13ஐ, வலியுறுத்தும் ஜெனிவா தீர்மானத்தை ஆதரிக்கின்றனர். 13ஐ, எதிர்ப்பவர்கள் ஜெனிவா தீர்மானத்தையுமல்லவா எதிர்க்க வேண்டும்! மனித உரிமைகள் பேரவையின் ஊடான அழுத்தங்களையுமல்லவா எதிர்க்க வேண்டும்! ஏனெனில், ஒரு குறித்த பிரேரணையில் ஒரு குறிப்பிட்ட விடயத்தை ஆதரிப்போம் - சில விடயங்களை ஆதரிக்க மாட்டோம் என்று கூற முடியாது. அவ்வாறு கூறினால் அது அரசியல் கற்றுக்குட்டித்தனமாகவே நோக்கப்படும்.

அடிப்படையில், 13 எதிர்ப்பு என்பது, தேர்தல் அரசியல் போட்டிக்கானதொரு, துருப்புச் சீட்டாக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு மேல் இந்தப் பிரசாரங்களுக்கு எந்தவொரு பெறுமதியும் இல்லை. 13இல் ஒன்றுமில்லையென்றால் அதன் பின்னர் அதனடிப்படையிலான மாகாண சபையை பயன்படுத்துவது தொடர்பில் சிந்திக்கக்கூடாது. மாகாண சபையில் ஒன்றுமில்லை என்பவர்களுக்கு முன்னால் ஒரேயோர் அரசியல் தெரிவுதான் உண்டு. அதாவது, ஆயுதப் போராட்டம்! இன்னோர் ஆயுதப் போராட்டத்திற்கு இவர்கள் தயாரா?

# தோல்வியுற்ற தேசம்!

**- அலசுவது இராஜதந்திரி -**

இலங்கையில் மாத்திரமல்ல. சர்வதேச ரீதியாகவும் இலங்கை குறித்துப் பேச ஆரம் பித்துள்ள விடயமொன்றையே எதிர்க் கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸ யாழ்ப்பாணத்தில் வைத்து குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை தற்சமயம் ஒரு ‘தோல்வியடைந்த நாடு’ என்பதே எதிர்கட்சி தலைவர் குறிப்பிட்டுக்கூறிய விடயமாகும்.

அண்மையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். அவரின் விஜயம் பெரிதும் எதிர்கால தேர்தல்களை குறிவைத்தே மேற்கொள்ளப்பட்டிருந்தமையையும் அறியக்கூடியதாக இருந்தது. ஏனெனில், வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்கள் இலங்கையின் தேசிய தேர்தல்களைப் பொறுத்தவரை ஒரு தீர்மானிக்கும் சக்தியாகவே அமைந்துள்ளனர்.

அத்துடன், அரசியல் மற்றும் மனிதாபிமானப் பிரச்னைகள் வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவடைந்துள்ள போதிலும் தீர்க்கப்படாதவையாகவே இருக்கின்றன. கடந்த காலங்களில் தேசிய தேர்தல்களில் போட்டியிட்ட முக்கிய அரசியல் புள்ளிகள் பலரும் வடக்கு - கிழக்கு மக்களின் ஆதரவைப்பெறும் விதத்தில் பலதரப்பட்ட வாக்குறுதிகளையும் வழங்கியிருந்தனர். ஆனால், அந்த வாக்குறுதி களில் பெரும்பாலானவை இதுவரை திருப்திகரமான முறையில் நிறைவேற்றப்படாது உள்ளமையையே அவதானிக்க முடிகின்றது. கடந்த கால தவறுகள் மற்றும் குறைபாடுகளை சுட்டிக்காட்டிப் பேசுவதற்கு வடக்கு - கிழக்கில் நிறையவே சமாச்சாரங்கள் இருக்கின்றன.

இவை யாவும், தென்னிலங்கை அரசியல் வாதிகளுக்கு மட்டுமல்ல. வடக்கு - கிழக்கின் அரசியல்வாதிகளுக்கும் அரசியலை நடத்துவதற்கு வாய்ப்பளித்தவையாகவே இருக்கின்றன. எனவே, முழுநாடுமே தற்போது பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள தருணத்தில் எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து அங்கே நாட்டின் தற்போதைய உண்மையான நிலவரம் குறித்து கருத்து வெளியிட்டபோதே இலங்கை ஒரு தோல்வியடைந்த நாடு (Failed State) என அப்பட்டமாக கூறியிருந்தார்.

இலங்கை தனது வல்லமைக்கு அப்பால் பட்ட விதத்தில் கடனாளியாகிப் போயுள்ளதை முழு உலகுமே நன்கறியும். பெருமளவு கடன்களைப்பெற்றும், அரசியல் ரீதியாக உறுதிப்பாட்டையும் கொண்டிராத நாடுகளே தோல்வியடைந்த நாடுகளாகக் கருதப்படுகின்றன. பெரும்பாலான ஆபிரிக்க மற்றும் தென்னமெரிக்க நாடுகள் தோல்வியடைந்த நாடுகளாக நோக்கப்படுகின்றன.

குறிப்பாக, எதியோப்பியா, சூடான், போன்ற நாடுகள் உட்பட ஆப்கானிஸ்தான், மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளும் தோல்வியுற்ற நாடுகள் என்ற வரையறைக்குள்ளேயே காணப்படுகின்றன.

இதுதவிர, தென்னமெரிக்காவில் உள்ள நாடுகள் சிலவும் உள்நாட்டு அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக தோல்வியுற்ற நாடுகள் என்று வரையறை செய்யப்பட்டுள்ளன.



இருந்தபோதிலும் நீடித்த உள்நாட்டு யுத்தம் காரணமாக அரசியல் ரீதியாக வும் பொருளாதார ரீதியாகவும் துவண்டு போயிருந்த வியட்நாம் இன்று பொருளாதார ரீதியாக உறுதிப்பாட்டை எட்டிய நாடாகக் காணப்படுகின்றது.

ஆனால், இலங்கையில் தகுந்த அரசியல் தலைமைத்துவமோ அல்லது பொருளாதார திட்டங்களோ இல்லாது வெளிநாடுகளிலிருந்து உதவிகளை எதிர்பார்த்து நிற்கும் நிலையே விரிவடைந்திருக்கின்றது.

இலங்கையின் இரண்டாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியும் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தந்தையாருமான ரணசிங்க பிரேமதாஸ, வடபகுதி மக்கள் மீது கரிசனை கொண்டவராகவே காணப்பட்டிருந்தார். அவர் தமது பதவிக்காலத்தில் ‘கம் உதாவ’ (கிராமங்களின் எழுச்சி) என்ற தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் வீடமைப்புத் திட்டங்கள் பலவற்றை ஆரம்பித்திருந்தார். வடக்கிலும் நாவற்குழியில் அவர் வீடைமப்புத் திட்டமொன்றை ஆரம்பித்திருந்தார்

அத்துடன், இலங்கை - இந்திய அமைதி ஒப்பந்தத்தை அமுலாக்க வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டிருந்த இந்திய அமைதிப் படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளை ஓரங்கட்டிய நிலையில், அவர்கள் இலங்கை அரச தரப்போடு பேச்சு நடத்த முன்வந்தபோது அவர்களை நிராகரிக்காது ஏற்றுக்கொண்ட முதலாவது தென்னிலங்கை அரசியல் தலைவராகவும் மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ விளங்கியிருந்தார்.

ஆயினும், தகுந்த அரசியல் சிந்தனையோடு செயல்பட்டிராத தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைத்தாக்குதலுக்கு ரணசிங்க பிரேமதாஸவும் இரையாகியிருந்தனர்.

இத்தகைய பின்னணியில் தற்போது தென்னிலங்கையில் ஓர் இளம் தலைமுறை அரசியல் தலைவராக இருக்கின்ற மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் புதல்வரான எதிர்கட்சி தலைவர் ரணசிங்க பிரேமதாஸவின் யாழ்ப்பாண விஜயம் எதிர்காலத்தில் ஒரு புதிய அரசியல் சிந்தனை குறித்த நம்பிக்கையை தருவதாக இருக்கின்றது. ஆயினும், வடக்கு - கிழக்கு மக்களின் நல்லாதரவை பெற்று அவர்களின் அரசியல் அபிலாசைகளையும் மனிதாபிமான பிரச்னைகளையும் தீர்ப்பதில் எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ எவ்வளவு தூரம் வெற்றி பெறுவார் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஜனவரி - 15 சனிக்கிழமை**
**பிலவ வருடம் - தை 2**
**நல்ல நேரம் : 7.30 - 9.00**
**ராகு காலம் : 09.00 - 10.30**
**திதி : திரயோதசி**




**மேடம்**
பணப்புழக்கம் உயரும். தள்ளிப்போன பயணம் இன்று அமையும். எதிர்பாராத நிகழ்வுகளால் மனதில் புத்துணர்ச்சி பெறுவீர்கள். சிரமமான நேரத்தில் நண்பர்கள் உதவிகரமாக இருப்பார்கள்

**இடபம்**
சேமிப்பில் ஆர்வம் கூடும். குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும். குடும்பத்தில் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகளை இன்று எடுப்பீர்கள்.

**மிதுனம்**
நல்ல காரணங்களுக்காக செலவுகள் அதிகரிக்கலாம். விருப்பத்துக்குரியவரின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள்.சம்பள உயர்வு பற்றிய சந்தோஷச் செய்து வந்து சேரும்

**கடகம்**
தாயாரின் உடல்நிலை குறித்து இருந்து வந்த பயம் தீரும். உங்களது பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். பெண்கள் குடும்ப நலனில் மிகுந்த அக்கறை கொள்வர்.

**சிம்மம்**
எதிர்பாராத நன்மையை அடைவீர்கள். உங்களது செல்வாக்கு அதிகரிக்கும். வரவு அதிகரிக்கும். நற்செய்தி ஒன்று உண்டு. மகிழ்ச்சி கூடும். செலவுகள் குறைய ஆரம்பிக்கும். நிம்மதி கூடுதலாகும்.

**கன்னி**
நல்ல வகையிலான செலவு அதிகரிக்கும். பயம் நீங்கும். வாகனம் ஓட்டும்போது கவனம் தேவை. நட்பு வட்டம் விரியும். உறவினர் வருகையால் மனதில் இருந்த குழப்பம் தீரும்.

**துலாம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. தந்தைக்கு அதிர்ஷ்டம் ஏற்படும். செயலில் கவனம் தேவை. குழந்தைகளின் போக்கு பற்றி பயம் வரும்.வழக்குகளில் வெற்றி கிடைக்க தாமதமாகும்.

**விருட்சிகம்**
வாகனம் ஓட்டும்போது கவனம் தேவை. சேமிப்பில் ஆர்வம் கூடும். வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு சுபச்செய்திகள் தேடி வரும். எதிரிகளின் தொல்லை ஒழியும். பங்குச்சந்தை இலாபத்தை தரும்.

**தனுசு**
நீண்ட நாளாக பணியிடத்தில் இருந்து வந்த சிக்கல் ஒன்று தீரும். புதிய வாய்ப்பு உங்களைத் தேடி வரும். எதிர்பாராத பணவரவு உண்டு. வீட்டில் சுப நிகழ்ச்சிக்கான முயற்சி நடைபெறும்.

**மகரம்**
உங்களது முயற்சிக்கு வெற்றி கிடைக்கும். கஷ்டம் தீரும். சொன்ன சொல்லைக் காப்பாற்றி பிறரிடம் பாராட்டு பெறுவீர்கள். உங்கள் உதவியால் உறவினர் ஒருவரின் திருமணம் கூடிவரும்

**கும்பம்**
மகன், மகளுக்கு இருந்து வந்த கவலைகள் அனைத்தும் தீரும். குழந்தைகளை பற்றி எதிர்பார்த்திருந்த சுபச்செய்திகள் தேடி வரும். உடல் ஆரோக்கியம் மேம்படும். திடீர் யோகம் உண்டாகும்.

**மீனம்**
மாணவர்களுக்கு படிப்பு விஷயங்களில் இருந்த குழப்பம் நீங்கும். பெண்கள் ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்ச்சி அடைவர். பணியாளர்களின் முயற்சி வெற்றி பெறும். குழந்தைகளால் நன்மை உண்டு.

# தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலை கைவிட இலங்கையை எச்சரியுங்கள்

## மத்திய அரசை வலியுறுத்தும் அன்புமணி ராமதாஸ்

சென்னை, ஜன. 15,

தமிழக மீனவர்கள் மீதான அத்துமீறல்களை - தாக்குதல்களை இலங்கை கைவிட மத்திய அரசு எச்சரிக்க வேண்டும் என பா.ம.க. இளைஞரணி தலைவர் அன்புமணி ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.



அன்புமணி ராமதாஸ் தன்னுடைய 'ருவிற்றர்' பதிவில் இதனைத் தெரிவித்திருக்கிறார். அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

"வங்கக்கடலில் கச்சத்தீவு அருகே 10 படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்கி விரட்டியடித்துள்ளனர் அவர்களின் வலைகள் அறுத்து சேதப்படுத்தப்பட்டுள்ளன. பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது கண்டிக்கத்தக்கது. தமிழக மீனவர்கள் மீது இலங்கை படையினர் தாக்குதல் நடத்துவது கடந்த ஒரு வாரத்தில் இது இரண்டாவது முறையாகும். கடந்த 10ஆம் திகதி நள்ளிரவிலும் கச்சத்தீவு பகுதியில் இதே போன்று தாக்குதல் நடத்தப்பட்டது. அந்த அதிர்ச்சி மறைவதற்குள் அடுத்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

டிசெம்பர் 18ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட 42 மீனவர்களும், 20ஆம் திகதி கைது செய்யப்பட்ட 13 மீனவர்களும் இலங்கை அரசால் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. இன்னொருபுறம் நடுக்கடலில் இலங்கை படையின் அத்துமீறல் தொடருகிறது. இவற்றுக்கு முடிவு எப்போது?. ஒருபுறம் இலங்கைக்கு இந்தியா நிதியுதவியும், இராணுவ உதவிகளையும் வாரி வழங்குகிறது. மறுபுறம் தமிழக மீனவர்களை இலங்கைப் படை கொடுமைப் படுத்துகிறது. இது என்ன நியாயம்? மீனவர்கள் மீதான அத்துமீறலை கைவிடும்படி இலங்கையை, இந்திய அரசு எச்சரிக்க வேண்டும்."

இவ்வாறு அதில் அவர் பதிவிட்டுள்ளார்.

# தயார் நிலையில் தமிழக அரசு; மோடியிடம் ஸ்டாலின் உறுதி!

சென்னை, ஜன. 15,

கொரோனா அலையை நிர்வகிப்பதில் ஒன்றிய அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் தமிழக அரசு துணை நிற்கும் என்று பிரதமரின் ஆலோசனைக் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.



கொரோனா பரவல் அதிகரித்து வரும் நிலையில் பிரதமர் மோடி நேற்று முன்தினம் மாலை அனைத்து மாநில முதல்வர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய பிரதமர், முந்தைய தொற்றை ஒப்பிடுகையில் ஒமைக்ரான் வேகமாகப் பரவி வருகிறது. இதனால் மக்கள் விழிப்புடனும், எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும். அது போன்று அனைத்து மாநிலங்களும் பொருளாதாரம், மக்களின் வாழ்வாதாரம் மற்றும் நிதி நிலைமை பாதிக்காதவாறு உள்ளூர் கட்டுப்பாடுகளை விதிக்கலாம் என்று தெரிவித்தார்.

கூட்டத்தில் பேசிய தமிழக முதல்வர் ஸ்டாலின், "ஒமைக்ரோன் அலையை நிர்வகிக்கத் தமிழகம் முழுமையாகத் தயார் நிலையில் உள்ளது. தமிழகத்தில் தடுப்பூசி செலுத்துவது அதிகரித்துள்ளது. அந்த வகையில் இன்று வரை, தகுதியுள்ளவர்களில் 64% பேருக்கு முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

கொரோனா நோய்த் தொற்றினைக் கட்டுப்படுத்திட, மாநில மற்றும் மாவட்ட அளவில் கட்டுப்பாட்டு அறைகளை ஏற்படுத்தியுள்ளதோடு, தேவையான அனைத்து நகரங்களிலும் கொரோனா பராமரிப்பு மையங்களும் தொடங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் தேசிய அளவில் வரையறுக்கப்பட்ட சோதனை விதிமுறைகளைத் தொடர்ந்து பின்பற்றப்படுகிறது.

கொரோனா பெருந்தொற்றைக் கட்டுப்படுத்தத் தேவையான அனைத்து விதிமுறைகள் மற்றும் நெறிமுறைகளைக் கண்டிப்பாக அமல்படுத்துமாறு அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தியுள்ளேன். நிலைமையைச் சமாளிக்க அனைத்து அரசு இயந்திரமும் முழுமையாகத் தயார் நிலையில் உள்ளது. இந்த கொரோனா அலையை நிர்வகிப்பதில் ஒன்றிய அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் தமிழ்நாடு துணை நிற்கும்' என்று கூறினார்.

எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**காளிமாதா ஜோதிட நிலையம்**



**இந்திய பிரபல்யமான பாரம்பரிய**

**கண்ணன் பொதுவாழ்தாஸ்**



ஜாதம், கைரேகை பார்த்து பலன் சொல்லுதல், கணவன் மனைவி சண்டை, காதல் பிரிவு, திருமண அக்கறையின்மை, வேலை தொழில் உத்தியோகம் போன்ற பிரச்சினையின்மை செய்வினை, சூனியம் போன்றமையால் தொழில் பாதிப்பு, வீட்டில் பேய், பிசாசு நடமாட்டம், சாக்கினி, டாக்கினி பேய் விரட்டப்படுதல் போன்ற பிரச்சினைகளையும், கண் திருஷ்டியால் வாழ்வில் முன்னேற்றமின்மை, குழந்தை பாக்கியம் இல்லாதவர்களும் வேண்டிய வழிகளைக் காட்டுதல், வெளிநாட்டுப் பிரயாண வாய்ப்புகள், சிறந்த கல்வி மேம்பாடு ஆகியவற்றுக்கும் பலன் சொல்வதோடு பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல் செய்தல் போன்றவற்றையும் செய்வார்.

**நேரம்: காலை 8.00 - இரவு 7.00**

**இல.109, மட்டு நகர் வீதி, கல்முனை**
**அர்ச்சனா ஜுவலரி அருகாமையில் (தேசிய சேமிப்பு வங்கி எதிர்ப்பக்கமாக)**
**075 217 1943**

# சு.க. வெளியேறினால் அரசு கவிழ்வது உறுதி

## நாமலுக்கு மைத்திரிபால பதிலடி



கொழும்பு, ஜன. 15

**“ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கூட்டு அரசில் பிரதான வகிபாகத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வகிக்கின்றது. இந்த அரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறினால் அரசு கவிழ்வது உறுதி.”**

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

“அரசின் கொள்கைகள் பிடிக்கவில்லையெனில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கௌரவமான முறையில் வெளியேற வேண்டும்” என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் இருந்துகொண்டு எமக்குச் சவால் விடும் சிறியவர்களும், பெரியவர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்துதான் அரசியலை ஆரம்பித்தார்கள். சுதந்திரக் கட்சிதான் அவர்களின் அரசியல் வாழ்வுக்கு முகவரி கொடுத்தது. இதை மறந்து அவர்கள் செயற்படுகின்றார்கள்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கூட்டணி வெற்றியடைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே பிரதான காரணம். இந்நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசில் பிரதான வகிபாகத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வகிக்கின்றது. அரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறினால் அரசு கவிழ்வது உறுதி.

இதை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமை புரிந்துகொள்ளும். அரசைக் கவிழ்ப்பது எமது நோக்கமல்ல. எனினும், அரசு தவறான பாதையில் தொடர்ந்து பயணித்தால் பிரதான பங்காளிக் கட்சியான நாம் அதிலிருந்து வெளியேறவும் தயங்கமாட்டோம் - என்றார். (அ)




# மன்னாரில் விபத்து; இருவர் படுகாயம்!

மன்னார், ஜன. 15

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பிரதான வீதி பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மன்னார் - பேசாலை பகுதியில் இருந்து மீன்களை ஏற்றிச் சென்ற கூலர் ரக வாகனம் ஒன்றே விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

மன்னார் பொது விளையாட்டு மைதான வீதி ஊடாக வைத்தியசாலை சந்தியை நோக்கிப் பயணித்த குறித்த வாகனம் வைத்தியசாலை சுற்றுவட்டப் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து அருகில் உள்ள கடைகளில் மோதி விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் வைத்தியசாலை பகுதியில் இயங்கி வந்த பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றின் விற்பனை நிலையம் முற்றாக சேதமாகி உள்ளதுடன் அருகில் இருந்த சில கடைகளும் சேதமடைந்தன.

இந்த விபத்தில் சாரதி மற்றும் நடத்துநர் பலத்த காயங்களுடன் இப்பகுதியில் ஒன்று கூடியவர்களினால் மீட்கப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (அ)

# வவுனியா-திருமலை வீதியில் விபத்து; ஆடை ஆலை ஊழியர் 13 பேர் காயம்!

வவுனியா, ஜன. 15

வவுனியா திருகோணமலை வீதி கெபிற்றிக்கொல்லாவை பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் 13 பேர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வவுனியாவில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற்றும் ஊழியர்களை ஏற்றிச்சென்ற இரண்டு பஸ்கள் டிப்பர் வாகனத்துடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் 12 ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் மற்றும் பஸ்ஸின் சாரதி ஆகியோர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நாய் குறுக்கிட்டமையால் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மின்சார சபைக்கு டீசல் விநியோகிக்க இணக்கம்

## பெற்றோலிய கூட்டுத்தாபனத் தலைவர்

கொழும்பு, ஜன. 15

இலங்கை மின்சார சபைக்கு நாளாந்தம் 1,500 மெற்றிக் தொன் டீசலை நாளாந்தம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, இந்த டீசல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் நாளாந்தம் விநியோகிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, மின் உற்பத்திக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், நாட்டின் பல பகுதிகளில் நேற்று முன் தினம் மின்சாரத் தடை ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது. (அ)

# ரயில் நிலைய அதிபர்களின் பணிநிறுத்தம் நிறைவடைவு

கொழும்பு, ஜன. 15

ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வந்த வேலைநிறுத்தப் போராட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 12ஆம் திகதி நள்ளிரவு முதல் ரயில் நிலைய அதிபர்கள் இந்த 24 மணிநேர வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பிக்கப்பட்டிருந்தனர்.

போக்குவரத்து அமைச்சின் செயலாளருடன் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்தே தமது தொழிற்சங்க நடவடிக்கை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் கைவிடப்பட்டதாக ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளின் சங்கத் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார். (அ)

# கொழும்பில் மீண்டும் பொலிஸாரின் பதிவு

கொழும்பு, ஜன. 15

கொழும்பில் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கிலும், கொழும்பில் குற்றங்கள் மற்றும் போதைப் பொருள் வர்த்தகத்தை இல்லாதொழிக்கும் நோக்கிலும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்து கொழும்பு நகரில் வசிக்கும் அனைத்து தற்காலிக குடியிருப்பாளர்களை யும் பற்றிய தகவல்களை சேகரிக்கும் மூன்று நாள் நடவடிக்கையை பொலிஸார் ஆரம்பிக்கவுள்ளனர்.

மேல்மாகாண சமூக பொலிஸ் பிரிவானது தேசிய பாதுகாப்பை பாதுகாத்தல், குற்றச்செயல்கள் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு என்ற தொனிப்பொருளின் கீழ் தகவல்களை சேகரிக்கும்.

அதன்படி, நேற்று முதல் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் உள்ள வீடுகள், வணிக வளாகங்கள், நிறுவனங்கள், அரச அல்லது தனியார் வளாகங்கள், கட்டுமானத் தளங்கள் போன்றவற்றில் வசிக்கும் அனைத்து தற்காலிக குடியிருப்பாளர்களின் தகவல்களையும் பொலிஸார் சேகரிக்கவுள்ளனர்.

குறித்த காலப்பகுதியில் வீடுகள் மற்றும் வீதிகளுக்குச் செல்லும் சமூக பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் இருந்து, வீடுகளிலோ அல்லது வேறு இடங்களிலோ தற்காலிக குடியிருப்பாளர்கள் வசிக்கும் பட்சத்தில், அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலிருந்து படிவத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

குறித்த பகுதியில் தற்காலிகமாக வசிப்பவர்கள் குறித்த சரியான தகவல்களை உள்ளீடு செய்து உரிய பொலிஸ் உத்தியோகத்தர்களிடமோ அல்லது சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்திலோ பொதுமக்கள் ஒப்படைக்குமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர். (அ)

# தேசிய கல்வியியல் கல்லூரிகளில் 18 ஆம் திகதி கற்பித்தல் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 15

கல்வியியல் கல்லூரிகளின் செயற்பாடுகள் இன்று ஆரம்பிக்கப்படுவதுடன், எதிர்வரும் 18 ஆம் திகதி கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தேசிய கல்வியியல் கல்லூரிகளின் செயற்பாடுகளை ஆரம்பிக்குமாறு கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன ஆலோசனை வழங்கியிருந்தார்.

கல்வி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இந்த ஆலோசனை வழங்கினார்.

இதற்கமைய, இன்று கல்வியியல் கல்லூரிகளின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுகின்றன. எதிர்வரும் 18 ஆம் திகதி கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

கோவிட்-19 சிகிச்சை நிலையங்களாக கல்வியியல் கல்லூரிகள் பயன்படுத்தப்பட்டமையால், அவற்றில் கற்பித்தல் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

தற்போது 7,784 பேர் ஆசிரியர் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளதுடன், 4,547 பேர் ஆசிரியர் சேவைக்கு இணைத்துக்கொள்வதற்குரிய தகுதியை பூர்த்தி செய்துள்ளனர்.

தகுதி பெற்றுள்ளவர்களை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்தன அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். (அ)

# நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் சீன நிபுணர்

கொழும்பு, ஜன. 15

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் இயந்திரக் கோளாறை ஆராய்வு செய்வதற்காக சீன நிபுணர் இலங்கை வந்துள்ளார்.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் ஜெனரேட்டர் செயலிழப்பை ஆராயும் நோக்கிலேயே குறித்த சீன நிபுணர் வந்துள்ளார் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து இலங்கை மின்சார சபையின் தலைவர் தெரிவிக்கையில்-

குறித்த ஜெனரேட்டர் விரைவில் பழுதுபார்க்கப்பட்டு 300 மெகாவாட் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்பில் சேர்க்கப்படுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

அதேநேரம் மின் விநியோகம் தொடர்பான தற்போதைய நிலைமை பெருமளவில் தீர்க்கப்படும் மேலும் மின் உற்பத்தி நிலையத்துக்கு நிலக்கரியை தடையின்றி வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு மே மாதம் வரை நிலக்கரி போதுமான அளவு கையிருப்பில் உள்ளன- என்றார். (அ)

மின்தடை குறித்து விசாரணை;

# பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு கையளிப்பு

கொழும்பு, ஜன. 15

அண்மையில் மின் உற்பத்தி நிலையங்களில் ஏற்பட்ட கோளாறுகள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு கையளிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் களனிதிஸ்ஸ அனல்மின் நிலையை வளாகத்தில் இரண்டு மின் நிலையங்களில் டீசல் இல்லாததால் நாடு முழுவதும் மின்துண்டிப்பு இடம்பெற்றிருந்தது.

இதன் காரணமாக 300 மெகாவோட் மின்சாரம் இழக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ளது. (அ)

# மைத்திரியை சிறையில் அடைக்க சதித்திட்டம்!

## தயாசிறி பரபரப்புத் தகவல்

கொழும்பு, ஜன. 15

**"மைத்திரிபால சிறிசேனவை திட்டமிட்ட அடிப்படையில் சிறையில் அடைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. இதன் பின்னணியில் செயல்படுபவர்கள் யார் என்பதும் எமக்கு தெரியும். நேரம்வரும்போது விவரம் வெளியிடப்படும்." - என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

எமது தலைவர் அரசை விமர்சித்துவருவதால், எதாவது செய்து அவரை சிறையில் அடைப்பதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த சவாலை அவர் எதிர்கொள்வார். எமது கட்சியும் தயார்நிலையில்தான் உள்ளது. மைத்திரிபால சிறிசேனவை பலவந்தமாக சிறையில் அடைக்க முற்படுவது யார் என்பதும் எமக்கு தெரியும். அரச பிரதானிகளா அல்லது வெளியில் உள்ளவர்களா என தற்போதே குறிப்பிடமுடியாது. நேரம்வரும்போது எல்லாவற்றையும் வெளிப்படுத்துவோம்.



நாட்டில் சட்டமென ஒன்று இருக்கின்றது. ஆனால் அதற்கு அப்பால் சென்று, மைத்திரியை சிறையில் அடைக்க வேண்டும் என சில அமைச்சர்கள் வலியுறுத்திவருகின்றனர். எனவே, இதன் பின்னணியில் இரகசிய நிகழ்ச்சி நிரலொன்று இருக்கக்கூடும்.

அதேவேளை, அரசிலிருந்து வெளியேறுவது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழு இன்னும் முடிவெடுக்கவில்லை. எனினும், அரசின் பயணம் தவறெனில் அதனை தைரியமாக சுட்டிக்காட்ட மத்திய குழு அனுமதித்துள்ளது. அரசின் பதவிகாலம் முடியும்வரை நாம் அரசில் அங்கம் வகிப்பாமோ என்பதை இப்போது கூறமுடியாது. சிலவேளை, எமது கட்சி நீக்கப்படக்கூடும்-என்றார். (அ)

# அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மணலை இறக்குமதி செய்ய திட்டம்

கொழும்பு, ஜன. 15

2024ஆம் ஆண்டு முதல் நாட்டில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான மணலை இறக்குமதி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

துறைமுக நகர அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நாட்டிலுள்ள ஆறுகளிலிருந்து மணலை வழங்கமுடியாது என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

2021-2025 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் மணல் தேவை 57 மில்லியன் கன மீற்றராக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நாட்டில் 42 மில்லியன் கனமீற்றரே உள்ளது.

ஆறுகளில் மணல் எடுப்பது நிறுத்தப்பட்டு வருகிறது. கிழக்கு மாகாணம் மற்றும் பொலனறுவையில் இருந்து மணல் எடுப்பதும் படிப்படியாக நிறுத்தப்பட்டு வருகிறது என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கடலில் ஆழமாக தோண்டுவதற்கு திட்டமிடப்பட்டாலும், மீனவ மக்களின் எதிர்ப்புக் காரணமாக மணல் இறக்குமதி செய்வதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் 2ஆம் கட்டம் இன்று திறக்கப்படும்!

கொழும்பு, ஜன. 15

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்டம் (அதுகல்புர நுழைவாயில்) இன்று பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்படும் என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மீரிகம முதல் குருநாகல் வரையிலான மத்திய அதிவேகப் பாதையின் இரண்டாம் கட்டம் (அதுகல்புர நுழைவாயில்) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்படும் என அவர் மேலும் கூறினார்.

# சுற்றுலாத்துறையை திட்டமிட்டவாறு மேம்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை

கொழும்பு, ஜன. 15

வீழ்ச்சியடைந்துள்ள இலங்கையின் சுற்றுலாத் துறையைத் திட்டமிட்ட வகையில் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற சுற்றுலாவுக்கு அனுமதி என்ற தொனிப் பொருளிலான ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுற்றுலாத்துறையின் வரலாறு காணாத வீழ்ச்சிக்கு உலகளாவிய கொரோனா தொற்றுப் பரவல் ஒரு முக்கிய காரணியாக மாறியிருக்கின்றது. இது, சுற்றுலாத்துறையில் பத்து இலட்சத்துக்கும் அதிகமான நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை இழக்கச்செய்யும் அளவுக்கு பலமிக்கதாக இருந்தது.

அதன் மூலம் தேசிய பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்குக் கிடைத்துவந்த பாரிய நிதியை நாடு இழந்துள்ளது.

நாட்டுக்கு வெளிநாட்டு நிதி கிடைக்கும் பிரதான மூல காரணிகளில் சுற்றுலாத்துறை மூன்றாவது இடத்தில் காணப்பட்டது.

ஏனைய நிதி மூலங்களுடன் ஒப்பிடுகையில், சுற்றுலாத் துறையில் இருந்தே நாட்டுக்கு நிகர வருமானம் கிடைத்தது.

புதிய திட்டங்கள் மற்றும் உத்திகளின்படி, 2030ஆம் ஆண்டளவில் நாடு 07 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வசதி மற்றும் முகாமைத்துவத்தை உயர்ந்த மட்டத்தில் பேணுவதற்குத் தேவையான நவீன மென்பொருளை எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, பொலிஸாரால் நடத்தப்படும் சுற்றுலா பொலிஸ் சேவையைப் புதிய வடிவில் மேற்கொள்வதற்காக அதன் பிரிவுகளை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது-என்றார். (அ)




# தேசிய வளங்களை இந்தியாவுக்கு தாரை வார்ப்பதை நிறுத்திக்கொள்!

## வவுனியாவில் சுவரொட்டிகள்

வவுனியா, ஜன. 15

"திருகோணமலை எண்ணெய் தாங்கிகள், தேசிய வளங்களை இந்தியாவிற்கு தாரை வார்க்கின்ற உடன்படிக்கையை சுருட்டிக்கொள்" என்ற வாசகத்தை தாங்கிய சுவரொட்டிகள் வவுனியா நகரின் பல இடங்களில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் ஒட்டப்பட்டுள்ள இந்தச் சுவரொட்டியின் கீழ்ப் பகுதியில் மக்கள் விடுதலை முன்னணி என உரிமை கோரப்பட்டுள்ளது. இந்த சுவரொட்டிகள் கண்டி வீதி, நூலக வீதி, மன் னார் வீதி, ஹொரவப்பொத் தானை வீதி, புகையிரத நிலைய வீதி என வவுனியா நகரின் பல இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன. (அ)

# நயினாதீவில் மாடுகள் களவாடப்பட்டு இறைச்சிக்காக வெட்டுதல் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 15

நயினாதீவின் பல பகுதிகளிலும் அண்மைக்காலமாக மாடுகள் களவாக பிடிக்கப்பட்டு இறைச்சிக்காக அறுக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன என கால்நடை வளர்ப்போர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் பலமுறை நயினாதீவு உப பொலிஸ் பிரிவில் முறையிட்டும் எந்த நடவடிக்கையை பொலிஸார் மேற்கொள்ளவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சுமார் 5 கிலோ கிராம் நிறையுடைய மாட்டிறைச்சியுடன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஒருவரை மடக்கிப் பிடித்த பொதுமக்கள், பொலிஸாரிடம் ஒப்படைத்தும் எவ்விதமான சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் உரிய தரப்பினர் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் மண்ணின் புனிதத்தை பேணுவதுடன், கால் நடை வளப்பாளர் மேல் கரிசனை காட்டுமாறும் மக்கள் கோரியுள்ளனர். (அ)

ஈழநாடு





## கிளிநொச்சியில் கூட்டமைப்பின் அலுவலகத்தில் நேற்று பொங்கல்

கிளிநொச்சி, ஜன. 15

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் நேற்று உழவர் திருநாளான தைபொங்கல் திருநாள் சிறப்பாக இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாவட்ட காரியாலயத்தில் நேற்று சூரியனுக்கு நன்றி செலுத்தும் உழவர் திருநாளான தைத்திருநாளை முன்னிட்டு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் பொங்கல் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# எதிர்வரும் காலங்களில் 24 மணிநேர மின்வெட்டு

## மின்சார சபை தொழிற்சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, ஜன. 15**

**எதிர்வரும் காலங்களில் நாட்டில் 24 மணி நேர மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படலாம் என்று இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கம் எச்சரித்துள்ளது.**

எதிர்காலத்தில் மின் தட்டுப்பாடு காரணமாக நாடு மூடப்பட நேரிடும் என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்தார்.

மின்சாரத் துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு அரசு தீர்வுகளை வழங்கத் தவறியதன் விளைவாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாடு ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை கடும் வறட்சியை எதிர்கொள்வதை இலங்கை மின்சார சபை அறிந்துள்ளது. எனினும் வறட்சிக்கு முகங்கொடுக்க இலங்கை மின்சார சபை தயாராக இல்லை.

மற்ற ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு மழைப்பொழிவு குறைவாக இருக்கும். நீர் மின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்து வருகின்றன.

நாட்டில் அதிக மழை பெய்து இரண்டு வாரங்களுக்கும் குறைவான காலமே கடந்துள்ள போதிலும், தற்போது நீர்த்தேக்கங்களில் சேறு சேகரிக்கப்பட்டதே தவிர, நீர் சேகரிக்கப்படவில்லை.

மின்வெட்டு ஏற்பட்டால் மின்சாரத்தை மீட்டெடுப்பதற்கு இலங்கை மின்சார சபைக்கு மின் நிலையங்கள் இல்லை. இது ஒரு நெருக்கடியான சூழ்நிலை.

தற்போது நடைமுறைப்படுத்தப்படும் மின்வெட்டு தொடர்பில் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்-என்றார். (அ)

# தொடர்ச்சியாக வேலைநிறுத்த போராட்டங்களை முன்னெடுக்கும் குழுக்களை விசாரிக்கவேண்டும்

## மிலன் ஜயதிலக்க எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜன. 15

நாட்டை பின்னோக்கிக் கொண்டு செல்லும் வகையில் தொடர்ச்சியாக வேலைநிறுத்தம் மற்றும் போராட்டங்களை முன்னெடுக்கும் குழுக்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கக் குழுவொன்று நியமிக்கப்படவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினரான மிலன் ஜயதிலக தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புலனாய்வுப் பிரிவினரை அதற்காக பயன்படுத்த வேண்டும்.

அண்மைய வாரங்களில் பல போராட்டங்கள் மற்றும் வேலைநிறுத்தங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அது மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதே குழுக்கள் தான் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பது புலனாகின்றது. அத்தகைய நபர்கள் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை நடத்த வேண்டும். அவர்கள் வேலைநிறுத்தம் மற்றும் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு நியாயமான காரணங்கள் உள்ளதா?.

கடந்த 70 ஆண்டுகளில் பல்வேறு காரணங்களால் நாட்டின் அபிவிருத்தி தடைபட்டுள்ளதால் அவற்றைத் தீர்ப்பதற்கும், நாட்டின் முன்னோக்கிப் பயணத்தை சேதப்படுத்துவதில் இருந்து பிரிவுகளைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்-என்றார். (அ)



## மலையகத்திலும் நேற்று களைகட்டியது பொங்கல்

கண்டி, ஜன. 15

மலையக மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சமய வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து தை பொங்கல் பண்டிகையை நேற்று வெள்ளிக்கிழமை கொண்டாடினார்கள்.

ஹற்றன் பகுதியில் ஹற்றன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் பிரதான குரு பிரம்ம ஸ்ரீபூர்ணசந்திரானந்த குருக் கள் தலைமையில் தைபொங்கல் விசேட வழிபாடுகள் நடை பெற்றன. இந்த வழிபாடுகளில் ஆலய பரிபாலன சபையினர் உட்பட பொது மக்களும் இந்த வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

அத்தோடு மலையகத்தில் பல ஆலயங்களில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி விசேட வழிபாடுகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேங்காய், தேங்காய் எண்ணெய் விலை அதிகரிக்கும் சாத்தியம்!

கொழும்பு, ஜன. 15

அரசாங்கம் 1.9 பில்லியன் தேங்காய் தேவையை சரியாக நிர்வகிக்கவில்லை என்றால், உள்ளூர் தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய் விலைகள் அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

வருடாந்த தேங்காய் உற்பத்தி 3 பில்லியனாக உள்ள நிலையில், நாட்டுக்கு 4.9 பில்லியன் தேங்காய் தேவை என நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கத்தின் தலைவரான ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்நாட்டு நுகர்வுக்கு மொத்தம் 1.8 பில்லியன் தேங்காய்கள் தேவை. அத்துடன் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கு மேலும் 1.8 பில்லியன் தேவை. ஏற்றுமதிக்குத் தேவையான தேங்காய்களின் எண்ணிக்கை 1.3 பில்லியனாகும்.

தேங்காய் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், பற்றாக்குறை 1.9 பில்லியனாக உள்ளது. இந்நிலையில் கடந்த ஆண்டு உள்ளூர் தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய் விலையும் உயர்ந்தது.

எனவே, இந்த நிலைமையை முன்னரே அரசாங்கத்திடம் தெரிவித்தோம். அப்போது அரசாங்கம் எடுத்த கவனக்குறைவான முடிவுகளால், உள்ளூர் நுகர்வோர் தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெயை அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

இருப்பினும், நிலைமையை சரியாக நிர்வகித்தால், அரசாங்கம் ஏற்றுமதி வருவாயை அதிகரிக்க முடியும்.

நாட்டின் தேவைக்கேற்ப அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தபோதிலும், தேங்காயை இறக்குமதி செய்ய முடியவில்லை. மேலும், நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடியால் ஏற்றுமதிக்குத் தேவையான 1.3 பில்லியன் தேங்காய்களின் அளவைக் குறைக்க முடியாதுள்ளது.

ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் தேங்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் தேங்காய்கள் சந்தைக்கு வருகின்றன.

தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காக கொள்வனவு செய்வதற்கு அதிக செலவு ஏற்படுவதால் தேங்காய் ஒன்றின் விலையானது ரூ.120 மற்றும் ரூ.130 ஆக உயர்வடையும். தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கு அதிக செலவீனம் ஏற்படுவதால் எதிர்காலத்தில் ஒரு போத்தல் தேங்காய் எண்ணெயின் விலையானது ரூ. 700 முதல் ரூ. 800 ஆக உயர்வடையும்-என்றார். (அ)



## ஆசிரியர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 15

நவாலி மகாவித்தியாலயத்தில் இருந்து இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்கள் பணியாளர் நலனபுரிச் சங்கத்தினரால் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர்.

ஆசிரியர் பணியாற்றி இடமாற்றலாகி வேறு பாடசாலைகளுக்குச் சென்ற ஆசிரியர்களுக்கான பிரியாவிடை வைபவம் அண்மையில் கல்லூரி முதல்வர் கே. கிருஸ்ணானந்தா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இடமாற்றலாகிச் சென்ற ஆசிரியர்கள் பாடசாலை வளாகத்தில் இருந்து அழைத்துவரப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (அ)

# ஆவணத்தை பெறமுன்னர் இலங்கைக்கான நிதியுதவியை உறுதிப்படுத்திய இந்தியா

அ.நிக்ஸன்



இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்கு அனுப்பவுள்ள ஆவணத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் சென்ற வியாழக் கிழமை கைச்சாத்திட்டுள்ள நிலையில், இந்திய மத்திய அரசு 900 மில்லியன் டொலர் பெறுமதியான நிதியுதவி இலங் கைக்கு வழங்கப்படும் என்று உறுதியளித் துள்ளது.

கொழும்பில் உள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று முன்தினம் வியாழக் கிழமை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலை நேரில் சந்தித்து உறுதிப்படுத்தினார். மோடிக்குக் கடிதம் அனுப்புவதற்காகக் கைச்சாத்திட்ட அன்றைய நாளே தமிழ் பேசும் மக்களின் தாயகமான கிழக்கு மாகாணம் திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்கள் இந்தியாவிடம் கையளிப்பதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

தமிழ்த்தேசியக் கட்சிகள் தாம் கைச்சாத்திட்ட ஆவணத்தைக் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் கையளிக்கத் தயாராக இருந்தபோது, தூதுவர் கோபால் பாக்லே புதுடில்லிக் சென்றிருந்ததாகக் கூறப்பட்டிருந்தது.

இதனால் கடிதம் கையளிக்கப்படவில்லை. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நல்ல நாள் பார்ப்பதாகவும் இதனாலேயே ஆவணத்தைக் கையளிக்கும் நிகழ்வு பிற்போடப்பட்டதென்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தவொரு நிலையில், இலங்கைக்கு தொள்ளாயிரம் மில்லியன் டொலர் வழங்குவது தொடர்பாக கொழும்பில் இந்திய இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இலங்கை மத்திய வங்கிக்கு நேற்று முன்தினம் நேரடியாகச் சென்று ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலைச் சந்தித்து நிதியுதவி வழங்கப்படவுள்ள செய்தியை அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறார்.

ஆனால், 13 இற்கு அப்பால் என்று கூறப்படும் அதிகாரப் பரவலாக்கத்தைக் கோருவதற்காக மோடிக்கு அனுப்பவிருந்த ஆவணத்தைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் இதுவரை கையளிக்கவில்லை.

ஆவணத்தைக் கையளிக்க வாருங்கள் என்று இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே அதிகாரபூர்வமாக இன்னமும் அழைப்பு விடுக்கவில்லையா அல்லது தமிழ்த்தேசியக் கட்சிகள் அதிகாரபூர்வமாக இதுவரை கேட்கவில்லையா என்பது குறித்து எதுவுமே அறிய முடியவில்லை. எதிர்வரும் 18 ஆம் திகதி இந்த ஆவணம் கையளிக்கப்படுவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனாலும் ஆவணத்தைப் பெற வேண்டுமென்பதில் கோபால் பாக்லேக்கு அக்கறை இருப்பதாகத் தெரியவில்லையென கொழும்பு உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவித்ததாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், இலங்கைக்கு இந்தியா வழங்கவுள்ள நிதியுதவி தொடர்பான செய்திக்கு கொழும்பில் உள்ள ஆங்கில ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்துள்ளன. இலங்கை சமீபகாலமாக எதிர்நோக்கும் அந்நியச் செலாவணி நெருக்கடியைக் குறைக்க இந்தியா முழு ஒத்துழைப்பு வழங்குமெனவும் இந்திய ஊடகங்களும் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கையின் அந்நிய செலாவணிக் கையிருப்பை வலுப்படுத்துவதற்காக இந்தியா, இலங்கைக்கு 900 மில்லியன் டொலரை வழங்கவுள்ளதாகக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக வட்டாரங்களும் கூறுகின்றன.

900 மில்லியன் டொலர் நிதியுதவி இலங்கைக்கு வழங்கப்படும் என்பதை இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இந்தியத் தூதுவர் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தியாவும் இலங்கையும் வர்த்தகச் செயற்பாடுகளில் சிறப்பாகச் செயற்பட்டு வருவதாகவும், இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதே இந்தியாவின் நோக்கம் எனவும் இந்திய ஊடகங்கள் விபரிக்கின்றன.

அதேவேளை, மோடியிடம் கையளிக்கவிருந்த ஆவணத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் வியாழக்கிழமை வவுனியாவில் தெரிவித்தார்.

மீளப் பெறப்பட முடியாத அதிகாரப் பரவலாக்கல் ஒன்றையே தாம் கோரியுள்ளதாகவும் சுமந்திரன் சுட்டிக்காட்டுகிறார். ஆனால் ஆவணம் மோடியிடம் எப்போது கையளிக்கப்படுமென அவர் எதுவுமே கூறவில்லை.

கொழும்பில் டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் கூறப்பட்டிருந்த விடயங்கள் குறைக்கப்பட்டு அதாவது உள்ளக சுயநிர்ணய உரிமை நீக்கம் செய்யப்பட்டு ஒற்றையாட்சியின் கீழான அதிகாரப் பரவலாக்கத்தையே கோரியுள்ளதாக தமிழரசுக் கட்சிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆகவே ஈழத்தமிழர்களின் தேசம், சுயநிர்ணய உரிமை ஆகிய பிரதான அம்சங்கள் முற்றாகவே நீக்கம் செய்யப்படக்கூடியதொரு முறையில், இலங்கை ஒற்றையாட்சி அரசுக்குள் "அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கம்" என்ற பெயரில் ஆவணம் தயாரிக்கப்பட்டிருக்கின்றதா என்று ஏலவே எழுந்த சந்தேகங்கள் மேலும் உறுதிப்படுத்தப்படும் நிலைமையே காணப்படுகின்றது.

அமெரிக்கா மற்றும் இந்தியாவுடன் இலங்கை ஒற்றையாட்சி அரசின் சிங்கள ஆட்சியாளர்கள் ஏலவே பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாடு தற்போது மெல்ல மெல்ல வெளிப்படுவது போலவும் தென்படுகின்றது.

2009 இல் ஏற்பட்டிருந்த புவிசார் அரசியல் போட்டியைப் பயன்படுத்திய இலங்கை ஒற்றையாட்சி அரசு, அமெரிக்கா, இந்தியா. பாகிஸ்தான் மற்றும் சீனா போன்ற பல நாடுகளிடம் இருந்து பெருமளவு ஆயுதங்களைப் பெற்றுப் பலவீனமாக இருந்த இலங்கை இராணுவத்தைப் பலப்படுத்திப் போரை நடத்தியிருந்தது.

அதன் பின்னரான பன்னிரெண்டு ஆண்டுகள் கடந்தவொரு சூழலில் ஏற்பட்டுள்ள இந்தோ- பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு விவகாரங்களைப் பயன்படுத்திப் பொருளாதார நெருக்கடிகளையும் இலங்கை சீர்செய்கின்றது.

அதற்காக ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை விவகாரங்கள் சர்வதேச அரங்கில் பேசுபொருளாக இருக்கக்கூடாது என்ற நோக்கில் அமெரிக்க- இந்திய அரசுகளுக்கு நிபந்தனைகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் இலங்கை விதித்திருக்கின்றது.

குறிப்பாக எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனீவா அமர்வில், மனித உரிமைச் சபையின் ஆணையாளர் சமர்ப்பிக்கவுள்ள வாய்மொழிமூல அறிக்கையில் வெளியிடப்படவுள்ள இலங்கை குறித்த விவகாரங்களைத் தணிக்கை செய்யக்கூடிய முறையிலேயே மோடிக்கு அனுப்பவுள்ள ஆவணம் தயாரிக்கப்பட்டதோ என்ற சந்தேகம் ஏற்கனவே எழுந்திருந்தன.

தற்போது அந்த சந்தேகங்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூற முடியும்.

அதாவது இலங்கை தனக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளைச் சீர் செய்வதற்குரிய முறையில் அமெரிக்க- இந்திய அரசுகளைக் கையாள ஈழத்தமிழர் விவகாரத்தை நன்கு பயன்படுத்துகின்றது என்றே கூற வேண்டும்.

இதன் பின்னணிகளை அறிந்து தமிழ் மக்கள் சார்பான நீதியான அரசியல் கோரிக்கைகளை முன்வைக்காமலும், இன அழிப்பு விசாரணைக்கான முக்கியத்துவத்தைக் கொடுக்காமலும், வெறுமனே வல்லரசு நாடுகளுக்கான புவிசார் அரசியல்- பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யக்கூடியதும் இலங்கையின் ஒற்றையாட்சிக் கோட்பாட்டை நிலை நிறுத்தக்கூடிய முறையிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுக்கான முழுப் பொறுப்பையும் தமிழரசுக் கட்சியே ஏற்க வேண்டுமென எந்தவொரு சிவில் சமூக அமைப்புகளும் இதுவரை பகிரங்கப்படுத்தவுமில்லை. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் தமிழரசுக் கட்சிக்கு ஒத்தூதுகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ, ஏனைய தமிழ்த்தேசியக் கட்சிகளின் அழிவில் இருந்து தேசியம் என்ற பெயரில் மற்றுமொரு அரசியல் செய்வதற்காக இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களோடு காத்திருக்கின்றது.

கொழும்பில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் பலமிழந்துள் ளன. இந்த இரு எதிர்க்கட்சிகளும் மீண்டும் கூட்டுச் சேரக்கூடிய சந்தர்ப்பங் களும் இல்லை.

ஜே.வி.பி ஆர்ப்பரித்தாலும் ஆட்சிய மைக்கும் அளவுக்கோ அல்லது சஜித், ரணில் அணிகளுடனோ கூட்டுச் சேரக்கூடிய வாய்ப்புகளோ இருப்பதாகத் தெரியவில்லை.

ராஜபக்ஷக்களின் சிறிலங்கா பொதுஜனப் பெரமுன அரசாங்கத்திற் குள் முரண்பட்டுள்ள சிறிய கட்சிகள் வெளியே வந்து எதிர்க்கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து புதிய அரசாங்கத்தை அமைக்கும் அளவுக்குச் சக்தி படைத்தவர்களாகவும் தெரியவில்லை.

குறிப்பாக அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்துக் கொண்டு முரண்பட்டுக் கொண்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியை உடனடி யாக நம்பும் அளவுக்கு ரணில்- சஜித் அணிகள் இல்லை என்பதும் வெளிப் படை.

இதனால் பொருளாதார நெருக்கடி யும் அரசாங்கத்துக்குள் உள்ளக முரண்பாடுகள், அதிருப்திகள் அதிகரித்தி ருந்தாலும் கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கமே மேலெழும் வாய்ப்பு தற்போதைக்கு உண்டு.

ஏனெனில் அமெரிக்க- இந்திய அரசுகள் 2015 ஆம் ஆண்டு மைத்திரி- ரணில் அரசாங்கத்தை ராஜபக்சக்களுக்கு எதிராக உருவாக்கிப் பின்னர் கண்ட தோல்வியால், இலங்கையில் மற்றுமொரு ஆட்சி மாற்றத்துக்குத் துணைபோவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

ஆகவே சிங்கள ஆட்சியாளர்களும் பௌத்த குருமாரும் சிங்கள மக்களில் பெரும்பான்மையோரும் விரும்புகின்ற இலங்கை ஒற்றையாட்சியைப் பலப்படுத்தினால், இலங்கையில் தாம் நினைப்பதைச் சாதிக்கலாமென்ற எண்ணக்கருவுடன் அமெரிக்க- இந்திய அரசுகளும் செயற்படுகின்றன என்பதே இங்கு பட்டவர்த்தனம்.

ஆனால், 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் இருந்து பன்னிரெண்டு ஆண்டுகளில் தமிழ்த்தேசியக் கட்சிகள், தேசம்- சுயநிர்ணய உரிமை என்பதிலும், இன அழிப்பு விசாரணையை நடத்துங்கள் என்ற கோரிக்கையிலும் பிடிவாதமாக ஒருமித்த குரலில் நின்றிருந்தால், இன்று நிலைமை மாறியிருக்க வாய்ப்புண்டு.

அரசு என்ற கட்டமைப்பு இல்லாத தேசிய இனம் ஒன்று, தேசமாக நின்று அதுவும் எழுபது வருட அரசியல் போராட்டம் நடத்திய இனம் ஒன்று ஒருமித்த கருத்தோடு நின்றிருந்தால், விரும்பியோ விரும்பாமலோ வல்லாதிக்க நாடுகள் செவிசாய்த்திருக்க வேண்டிய கட்டாயச் சூழல் உருவாகியிருக்கும்.

அதற்கேற்ப இன்றைய புவிசார் அரசியல் போட்டிகளும் நிலவுகின்றன. இருந்தாலும் தேர்தல் அரசியலில் மாத்திரம் தமிழ்த் தேசியக் கட்சிகள் கவனம் செலுத்தியதனால் ஏற்பட்ட விளைவே இன்று கையாளப்படும் இனமாக மாற்றப்பட்டிருக்கின்றது.

# மெய்நிகர் தளத்தில் குழந்தைகளின் பாதுகாப்பு?

மெய்நிகர் தளத்தில் பெற்றோரின் கட்டுப்பாடுகள் இல்லாமல் இருப்பது, குழந்தைகளுக்கு ஆபத்தை விளைவிக்கிறது என அதிகரித்து வரும் கவலைக்கு மத்தியில், முகநூலின் தாய் நிறுவனமான மெடா, பிரிட்டனின் தரவுகள் கட்டுப்பாட்டு அமைப்புடன் ஆலோசனை நடத்தவிருக்கிறது.

கட்டுப்பாட்டு வசதிகள் இல்லாமல் இயங்கும் ஒக்யூலஸ் க்வெஸ்ட் 2, குழந்தைகளின் பாதுகாப்புக் குறியீட்டை மீறுவதாக பிரசாரகர்கள் வாதிடுகின்றனர், இது குறித்து தகவல் ஆணையர் அலுவலகம் (ICO) மெடா நிறுவன நிர்வாகிகளுடன் விவாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விர்ச்சுவல் ரியாலிட்டி ஹெட்செட் கடந்த ஆண்டு இறுதியில் கிறிஸ்மஸ் பண்டிகையின்போது வழங்கப்பட்ட ஒரு பிரபலமான பரிசாக நிரூபிக்கப்பட்டது.

சமூக ஊடக உரிமையாளர்கள் இந்த தொழில்நுட்பத்தை மக்களிடையே பிரபலப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர், ஆனால் பொருத்தமற்ற உள்ளடக்கத்தைத் தடுப்பதற்கான வழிமுறைகள் இல்லாததால் அது தீங்கு விளைவிக்கலாம் என்ற கவலை அதிகரித்து வருகிறது.

குழந்தைகள் பயன்படுத்தக்கூடிய இணையதள சேவைகள், அவர்களின் பயன்பாட்டிற்கு பொருத்தமானவை என்பதை உறுதி செய்வதே இந்த ஊழனநகின் நோக்கமாக உள்ளது.

தகவல் ஆணையர்களின் அலுவலகத்துடன் இணைந்து இந்த CodeI செயல்படுத்த வேலை செய்வதாக மெடா நிறுவனம் கூறுகிறது.

"கோடின் கீழ் உள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும், குழந்தைகளின் வயதுக்கு ஏற்ற அனுபவங்களை வழங்குவதற்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்" என்றும் அந்த நிறுவனம் கூறியது.

ஒக்யூலஸ் பயனர்கள் 13 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும், என நிறுவனத்தின் வழிகாட்டுதல் கூறுகிறது: "வயதானவர்கள் தங்கள் குழந்தைகள் எப்படி... ஒக்யூலஸ் சாதனங்களைப் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கண்காணிக்க வேண்டும்."

ஆனால் குழந்தைகள் கோடிங் வடிவமைப்பாளரான கிராஸ்பெஞ்ச் பியர் பீபன் கிட்ரான், இந்த கட்டுப்பாடுகள் போதுமானதாக இல்லை என்று தான் கவலைப்பட்டதாகக் கூறினார்.

"ஒக்யூலஸ் போன்ற மெய்நிகர் தளத்தை பயன்படுத்தும் குழந்தைகள், குறைந்தபட்ச வயதுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகக் கூறும் பாக்சை டிக் செய்வதன் மூலம், அரட்டை அறைகள் மற்றும் ஆபத்தை ஏற்படுத்தும் பிற அம்சங்களை அணுகலாம்."



**சமூக ஊடக உரிமையாளர்கள் இந்த தொழில்நுட்பத்தை மக்களிடையே பிரபலப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர், ஆனால் பொருத்தமற்ற உள்ளடக்கத்தைத் தடுப்பதற் கான வழிமுறைகள் இல்லாததால் அது தீங்கு விளைவிக்கலாம் என்ற கவலை அதிகரித்து வருகிறது.**

**விஆர் சாட்** (VR Chat)

சமீபத்தில், மெய்நிகர் தளத்தில் குழந்தை பாதுகாப்பு குறித்த பிரச்சனை இருப்பதாக டிஜிட்டல் வெறுப்பை எதிர்க்கும் மையத்தால் ( Center for Countering Digital Hate - CCDH) எழுப்பப்பட்டது. பிரசாரக் குழு விஆர் சாட் எனப்படும் பிரபலமான மூன்றாம் தரப்பு பயன்பாட்டைப் பார்த்தது.

மெய்நிகர் தளத்தின் ஹெட்செட்டின் ஆப் ஸ்டோரில் கிடைக்கும் ஒக்யூலஸ் உட்பட பல தளங்களில் இந்த ஆப் வேலை செய்கிறது.

CCDH மையம் தனது ஆராய்ச்சியில் 18 வயதுக்குட்பட்டவர்கள் சந்தித்த பிரச்சனைகளாக கூறப்பட்டவை:

- கிராஃபிக் வடிவில் பாலியல் தகவல்கள்
- கொடுமைப்படுத்துதல், பாலியல் துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகம்
- இனவாத அவதூறுகள் மற்றும் தீவிரவாதப் பேச்சுகளை திரும்பத் திரும்ப பேசுதல்



விஆர் சாட் பயன்பாடு பயனர்களை மெய்நிகர் சூழல்களை (Virtual environ ment) அல்லது மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள 'உலகங்களை' உருவாக்க அனுமதிக்கிறது.

சிசிடிஎச் அறிக்கையின்படி, "செக்ஸ் கிளப் என கருப்பொருள் கொண்ட ஒரு பயனரால் கட்டமைக்கப்பட்ட சூழலை ஆராய்ச்சியாளர்கள் பார்வையிட்டனர், இருப்பினும் இது 13 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு ஏற்றது என்று குறிப்பிடப்பட்டிருந்தது".

விஆர் சாட் பக்க கருத்துக்களை அறிய பிபிசி அவர்களை அணுகியுள்ளது.

விஆர் சாட் - இன் சமூக வழிகாட்டுதல்களின்படி, துன்புறுத்தல் அனுமதிக்கப்படாது, 'ஆபாசம் மற்றும் நிர்வாணம் அனுமதிக்கப்படாது' மற்றும் "வெறுப்பூட்டும் பேச்சுகள், மொழி, சின்னங்கள் மற்றும் செயல்கள் உட்பட எதையும்" அனுமதிக்காது.

**தொடர் முயற்சி**

ICO கூறிகையில் "ஒக்யூலஸ் தயாரிப்புகள் மற்றும் மெய்நிகர் தளத்தின் சேவைகளுக்கான வடிவமைப்பு அணுகுமுறைகள் மூலம் மெடாவுடன் இணைந்து அதன் குழந்தைகளின் தனியுரிமை மற்றும் தரவுப் பாதுகாப்பு குறித்து மேலும் விவாதங்களை நடத்த திட்டமிட்டுள்ளோம்."

குழந்தைகளுக்கு எதிரான கொடுமைகளைத் தடுப்பதற்கான தேசிய அமைப்பின் குழந்தைப் பாதுகாப்பு இணைய கொள்கையின் தலைவரான ஆண்டி பர்ரோஸ், மெய்நிகர் பாதுகாப்பு குறித்தும் கவலை தெரிவித்தார்.

"ஒக்யூலஸ்ஐ பயன்படுத்தும் போது குழந்தைகள் தீங்கு விளைவிக்கும் மற்றும் பொருத்தமற்ற உள்ளடக்கத்திற்கு வெளிப்படுத்தப்படலாம்" என்று அவர் எழுதினார்.

ஓர் அறிக்கையில், : "ICO உடன் கலந்தாலோசித்து, வயதுக்கு ஏற்ற வடிவமைப்புக் குறியீட்டிற்குள் (குழந்தைகளுக்கான CodeI) தரங்களைச் செயல்படுத்த நாங்கள் பணியாற்றி வருகிறோம். இது எங்கள் பங்கில் தொடர்ச்சியான முயற்சியாகும், இது டிஜிட்டல் சூழலைச் சுற்றியுள்ள தொழில்நுட்பங்கள், வழிகாட்டுதல் மற்றும் புரிதல் மற்றும் இளைஞர்கள் அதனுடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறார்கள் என்பதை கணக்கில் எடுத்துக் கொள்கிறது." என மெடா கூறியுள்ளது.

பி.பி.சி.




# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

29. ஒரு குறித்த மாணவர் குழுவிடம் அவர்கள் விரும்பும் உணவு வகை பற்றிப் பெறப்பட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.




(i) மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்கள் விரும்பும் உணவு வகை யாது?

:.................................................

(ii) மாணவர்கள் சமமான எண்ணிக்கையில் விரும்பும் இரு உணவு வகைகளும் யாவை?

:.................................................

(iii) குறித்த குழுவில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

- இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30. 'தன்னிறைவான ஒரு நாட்டில் சூரியனும் சந்திரனும் இருக்கும் காலமெல்லாம் அறத்தைப் பாதுகாத்தவாறு மக்கள் யாவரும் ஓங்கட்டும்' என்னும் ஒரு நோக்கக் கருத்தை வெளிப்படுத்துவது இலங்கையின்.
   (1) தேசியக் கொடி (2) தேசிய கீதம் (3) தேசிய இலச்சினை

31. ஒரு குறிப்பிட்ட காலத்தின்றி வருடம் முழுவதும் பூக்கள் பூக்கும் தாவரங்களை **மாத்திரம்** கொண்ட விடை.
   (1) தென்னை, வாழை, செவ்வரத்தை
   (2) செவ்வரத்தை, இறப்பர், மா
   (3) வேம்பு, தேக்கு, இறப்பர்

32. உடல், உள சுகத்திற்கான செயற்பாடுகளில் "மனவுறுதி" (திடசித்தம்) எத்தனையாம் படிமுறையாகும்?
   (1) மூன்றாம் (2) நான்காம் (3) ஐந்தாம்

33. தேசியக் கொடியில் உள்ள செம்மஞ்சள் நிறப்பட்டி குறிப்பது.
   (1) முஸ்லிம்களை (2) தமிழர்களை (3) சிங்களவர்களை

34. இலங்கையின் தேசியக் குறியீடுகளில் இரண்டு.
   (1) காட்டுக் கோழியும், நிறைகுடமும்
   (2) நீலோற்பலமும், நாகமரமும்
   (3) தர்மச்சக்கரமும், அரச இலையும்

35. 'மிஹிந்து ஊர்வலம்' பின்வரும் எச்சமயத்தவர்களுடன் தொடர்புடையது?
   (1) பௌத்தர்கள் (2) இந்துக்கள் (3) கிறிஸ்தவர்கள்

36. செவ்வெறும்புகளின் கூடு காணப்படத்தக்க ஒரு மரம்.
   (1) தென்னை (2) கமுகு (3) வேம்பு

37. ஔடத பானம் தயாரிக்கப் பயன்படும் பூக்கள்,
   (1) கறிவேப்பிலை, செவ்வரத்தை
   (2) அகத்தி, சாத்தாவாரி
   (3) பொன்னாவரை, வில்வம்

38. தனிப்பட்ட வகையில் ஒருவர் பயன்படுத்த வேண்டிய பொருள்களில் இரண்டு,
   (1) பேனை, குடை (2) பற்தூரிகை, சீப்பு (3) சீப்பு, குடை

39. குறித்த வேளையில் உணவை உண்ணாமல் இருப்பதால் ஏற்படத்தக்க ஒரு நோய்.
   (1) உயர்குருதி அமுக்கம் (2) இரைப்பையழற்சி (3) நீரிழிவு

40. உடலுக்குச் சக்தியைத் தரும் உணவு.
   (1) வல்லாரை (2) இறைச்சி (3) உருளைக்கிழங்கு

41. ஈக்கள் மொய்த்த உணவுகளை உண்பதால் ஏற்படத்தக்க நோய்.
   (1) கழிச்சல் (2) நீர்வெறுப்பு (3) மலேரியா

42. பின்வரும் பிராணிகளுள் ஊர்வன அல்லாதது.
   (1) தவளை (2) உடும்பு (3) ஆமை

43. 

   படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணம் பின்வரும் எதனைச் செய்வதற்கு மிகப் பொருத்தமானது?
   (1) திருகு ஆணியைச் சுழற்றுவதற்கு
   (2) மரப்பலகையில் துளையிடுவதற்கு
   (3) தகட்டினை வெட்டுவதற்கு

44. பின்வருவனவற்றுள் இலங்கையின் கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று.
   (1) கரப்பந்தாட்டம் (2) வலைப்பந்தாட்டம் (3) சடுகுடு

45. பயணத்திற்காகப் பாதையைப் பயன்படுத்தும் போது நாம் செய்யக் **கூடாதது.**
   (1) கூட்டமாகச் சேர்ந்து உரையாடியபடி பயணித்தல்
   (2) நடந்து செல்கையில் பாதையின் வலது புறத்தைப் பயன்படுத்துதல்.
   (3) பாதையைப் பரிசீலிக்காது பாதைக்கு ஓடிச் செல்வதைத் தவிர்த்தல்.

### விடைகள்

| | | |
|---|---|---|
| 29. (i) | தோசை | (1 புள்ளி) |
| (ii) | கடலை, இடியப்பம் | (1 புள்ளி) |
| (iii) | 45 | (2 புள்ளிகள்) |

30. (3) 31.(1) 32. (1) 33. (2) 34. (2) 35. (1) 36. (3) 37. (3) 38. (2) 39. (2)
40. (3) 41.(1)

---

கல்வி tv CHANNEL-1

**15.01.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**15.01.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# சர்வதேச கடமைகளுக்கு இணங்க மனித உரிமை மேம்படுத்தப்படும்

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் உறுதி

கொழும்பு, ஜன. 15

**நல்லிணக்கத்தின் முன்னேற்றம் மற்றும் நாட்டின் சர்வதேசக் கடமைகளுக்கு இணங்க மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்குமான நம்பகமான உள்நாட்டுக் கட்டமைப்பு குறித்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஹங்கேரி வெளிவிவகார அமைச்சருக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.**

ஹங்கேரி வெளியுறவு மற்றும் வர்த்தக அமைச்சர் பீட்டர் சிஜார்டோவுடன் நடைபெற்ற இருதரப்பு சந்திப்பிலே இது குறித்து அவதானம் செலுத்தப்பட்டது.

மேலும் இந்த சந்திப்பின் போது , இலங்கை - ஹங்கேரி இருதரப்பு உறவுகளை முடிவு சார்ந்த, பலதரப்பட்ட பங்காளித்துவமாக மாற்றுவதற்கான இலங்கையின் தீவிரமான ஆர்வத்தை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் வெளிப்படுத்தினார்.

இரு தரப்பு ஆர்வமுள்ள பல துறைகள் குறித்து இரு அமைச்சர்களும் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

எஞ்சியிருக்கும் நல்லி



ணக்கப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் ஹங்கேரியின் அணுகுமுறையைப் பாராட்டிய அமைச்சர் பீரிஸ், நல்லிணக்கத்தின் முன்னேற்றம் மற்றும் நாட்டின் சர்வதேசக் கடமைகளுக்கு இணங்க மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் உள்ள நம்பகமான உள்நாட்டுக் கட்டமைப்பு குறித்தும் ஹங்கேரிய அமைச்சருக்குத் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் ஹங்கேரி அங்கம் வகிப்பதாகவும், அதனுடன் இலங்கை முக்கியமான மற்றும் நிலையான பங்காளித்துவத்தைப் பேணி வருவதாகவும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

தற்போதைய உலக சூழலில் வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா உறவுகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பொருளாதார உறவுகளை விரிவுபடுத்துதல் மற்றும் ஆழமாக்குதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இரு அமைச்சர்களும் எடுத்துரைத்தனர். இந்த நோக்கத்தில், பொருளாதார ஒத்துழைப்புக்கான இலங்கை - ஹங்கேரி கூட்டு ஆணைக்குழுவின் இரண்டாவது அமர்வை இவ்வருடம் முற் பகுதியில் கூட்டுவதற்கு இரு அமைச்சர்களும் ஒப்புக் கொண்டனர். (அ)



# வவுனியாவில் சிறப்பான பொங்கல்

வவுனியா, ஜன. 15

அறுவடைப் பண்டிகையாம் தைப்பொங்கல் திருநாள் வவுனியாவிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

விவசாயத்தைக் தமது ஜீவனோபாயமாகக் கொண்டு வாழும் மக்கள் அதிகம் வாழும் வவுனியா மண்ணிலும் விவசாயிகள் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் முகமாக சூரியன் உதிக்கும் திசைநோக்கி வீட்டிலும் தமது தொழில் ஸ்தாபனங்களின் முற்றத்திலும், ஆலயங்களிலும், அரச மற்றும் தனியார் திணைக்களங்களுக்கு முன்பகுதியிலும் மாவிலைத் தோரணம்கட்டி கோலம் போட்டு, கலாசார ஆடைகள் அணிந்து புதுப்பானையில் பொங்கி பட்டாசு கொளுத்தி மகிழ்வதை அவதானிக்க முடிந்தது. இவ்வருடம் விவசாயத்தில் எதிர்பாராத விதத்தில் பாரிய நஷ்டம் ஏற்பட்டிருந்தாலும் தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையில் இம்முறை சூரிய பகவானை வேண்டி தைப் பொங்கல் பண்டிகையை கொண்டாடினர். (அ)

# கின்னஸில் இடம்பிடித்த இலங்கை இரத்தினக்கல்!

கொழும்பு, ஜன. 15

கடந்த ஆண்டு இரத்தின புரியில் கண்டுபிடிக்கப்பட்ட 500 கிலோ எடையுள்ள நீல நிற இரத்திக்கல் உலகின் மிகப் பெரிய சபையர் இரத்தினக்கல் கொத்து என கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.

இது குறித்து கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது சுவிற்ஸர்லாந்தில் வைக்கப்பட்டுள்ள குறித்த இரத்தினக்கல் கொத்து, அதிகலாபத்திற்கு ஏலத்தில் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுவிற்சர்லாந்தில் உள்ள Gübelin Gem Lab இதனை நட்சத்திர இரத்தினக்கல் என



சான்றளித்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.

இரத்தினபுரி பகுதியில் கடந்த ஆண்டு இந்த இரத்தினக் கல் கண்டுபிடிக்கப்பட்டது. 510 கிலோகிராம் அல்லது 2.5 மில்லியன் காரட் எடையுள்ள இந்த கொத்து செரண்டிபிட்டி என்று அழைக்கப்படுகிறது. (அ)

# திருமண நிகழ்வில் நடனமாடி மயங்கி விழ்ந்த நபர் மரணம்

கொழும்பு, ஜன. 15

பாணத்துறை - கொரகான பகுதியில் ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற திருமண நிகழ்வில் நடனமாடிக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தார்.இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்றுள்ளது.

வாதுவ-பொதுப்பிட்டிய பகுதியை சேர்ந்த 24 வயதுடைய நிஷான் லக்ஷான் ஜயரத்ன என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவ தினத்தன்று உயிரிழந்த குறித்த இளைஞர் தனது நண்பியின் திருமண நிகழ்வில் கலந்துக்கொண்டார். இதன் போது ஏனைய நண்பர்களுடன் நடனமாடிக் கொண்டிருக் கையில் திடீரென மயங்கி விழுந்துள்ளார். பின்னர் பாணத்துறை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். இதன் பின்னரே அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# யாழில் அனுமதியின்றி அட்டை பிடித்த 21பேருக்கு ரூபா 250,000 வீதம் தண்டம்

கொழும்பு, ஜன. 15

அனுமதியின்றி கடலட்டை பிடித்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட 21 பேருக்கும் தலா 25 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை நீதிமன்ற பிரதேசத்துக்கு உட்பட்ட கடல் பகுதிகளில் கடந்த ஆண்டு அனுமதி இன்றி கடல் அட்டை பிடித்த 21பேருக்கு எதிராகவும் அவர்கள் பயன்படுத்திய 7 படகுகள் தொடர்பிலும் மாவட்ட நீரியல்வளத் துறை அதிகாரிகளினால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை ஆராய்ந்த பருத்தித்துறை நீதவான் பொ. கிருசாந்தன் 21 பேருக்கும் தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் குற்றப் பணம் விதித்ததோடு படகு தொடர்பான உரிமைக் கோரிக்கையை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (அ)

# விடைபெற்றார் பி.பீ.ஜயசுந்தர!

கொழும்பு, ஜன. 15

ஜனாதிபதியின் செயலாளர் பதவியில் இருந்து கலாநிதி பி.பீ.ஜயசுந்தர நேற்று இராஜினாமா செய்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற எளிமையான நிகழ்வில் பதவி விலகுவதாக அவர் அறிவித்தார்.

இதன்போது அவர் தனது அலுவலக அதிகாரிகளிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டார்.

பி.பீ.ஜயசுந்தர பல வருடங்களாக அரசாங்கத்தின் உயர் பதவிகளை வகித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதியின் புதிய செயலாளராக காமினி செனரத் நியமிக்கப்படவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

# ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகளின் போராட்டத்தினால் ரூ.70 லட்சம் நட்டம்!

கொழும்பு, ஜன. 15

ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்கப் போராட்டத்தினால் 70 லட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகளின் திடீர் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் ஒரே நாளில் ரயில் திணைக்களத்துக்கு 70 லட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது என திணைக்களத்தின் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

பயணிகளையும் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கி இவ்வாறு திடீர் தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுப்பது எந்த வகையிலும் நியாயமற்றது எனவும் குறிப்பிட்டார்.

இந்த தொழிற்சங்கப் போராட்டம் குறித்து ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் எந்தவிதமான முன் அறிவித்தலையும் வழங்கவில்லை என அவர் குற்றம் சுமத்தினார்.

போராட்டம் முன்னெடுப்பதற்கு அரை மணித்தியாலத்துக்கு முன்னரே இது குறித்து அறிவிக்கப்பட்டது எனவும் அவர் கூறினார். (அ)

# பண மோசடியில் ஈடுபட்ட பெண்ணொருவர் கைது

கொழும்பு, ஜன. 15

தொழில் பெற்றுத் தருவதாக கூறி பண மோசடி செய்த பெண்ணொருவர் பத்தரமுல்ல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், சந்தேகநபர் நேற்று முன் முன் தினம் கைதுசெய்யப்பட்டதுடன், 2020ஆம் ஆண்டு இந்த மோசடியில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# வடகொரியாவின் அதிகாரிகள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை!

நியூயோர்க், ஜன. 15

வடகொரியாவின் அண்மைய தொடர்ச்சியான ஏவுகணை சோதனைகளுக்குப் பதிலடியாக, நாட்டின் 5 அதிகாரிகள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

வடகொரியாவின் ஏவுகணைத் திட்டத்துக்குத் தேவையான பொருள்கள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பெற்றுத் தந்த 5 அதிகாரிகள் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படுவதாக நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, வட கொரிய ஆயுதத் தயாரிப்பு திட்டங்களுக்கு உறுதுணையாக இருக்கும் மேலும் ஒரு வட கொரியர், ஒரு ரஷ்யர், ஒரு ரஷ்ய நிறுவனம் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படுவதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒலியைப் போல் 5 மடங்கு வேகமான (ஹைபர்சொனிக்) ஏவுகணையை மூன்றாவது முறையாக கடந்த செவ்வாய்க் கிழமை பரிசோதித்துப் பார்த்ததாக வட கொரியா அறிவித்தது.

அதற்குப் பதிலடியாகவே வட கொரிய அதிகாரிகள் மீது அமெரிக்கா தற்போது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. (அ)

# மோதல் போக்கை கடைப்பிடித்தால் எதிர்வினையாற்ற நாங்களும் தயார்!

## அமெரிக்காவுக்கு வடகொரியா எச்சரிக்கை

பியொங்யாங், ஜன. 15

ஐ.நா. பாதுகாப்பு சபை தீர்மானங்களை மீறியும், உலக நாடுகளின் எதிர்ப்புகளை கண்டுகொள்ளாமலும் வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை நடத்தி வரும் நிலையில் அந்நாட்டு அதிகாரிகள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

இந்நிலையில் இத்தடையைக் கண்டித்துள்ள வடகொரியா, இந்த நடவடிக்கை நிலைமையை மேலும் சிக்கலாக்கும் என எச்சரித்துள்ளது.

அத்துடன், அமெரிக்கா ஒரு மோதல் நிலைப்பாட்டை கடைப்பிடித்தால் அதற்கு கடுமையான எதிர்வினையாற்ற தாமும் தயாராக வட கொரிய வெளியுறவு அமைச்சகத்தை மேற்கோள் காட்டி அந்நாட்டு அரசு ஊடகங்கள் நேற்று செய்தி வெளியிட்டுள்ளன.

ஐ.நா. பாதுகாப்பு சபை தீர்மானங்களை மீறியும், உலக நாடுகளின் எதிர்ப்புகளை கண்டுகொள்ளாமலும் வட கொரியா தொடர்ந்து ஏவுகணை ஆயுத சோதனைகளை நடத்தி வருகிறது. கடந்த செவ்வாய்க்கிழமையன்று ஒலியை விட 5 மடங்கு வேகமாகச் சென்று இலக்கைத் துல்லியமாகத் தாக்கக்கூடிய ஹைபர்சொனிக் ஏவுகணை சோதனையை அந்த நாடு நடத்தியது.

இந்த சோதனை அடுத்து ஏவுகணை சோதனையில் தொடர்புடைய வடகொரியாவின் 5 மூத்த அதிகாரிகள் மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

வட கொரியாவின் ஏவுகணை திட்டங்களுக்கான உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பெறுவதில் அவர்கள் ஆற்றிய பங்குக்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க நிதித்துறை கூறியுள்ளது.

வட கொரியா மீது ஐ.நா. பாதுகாப்பு சபை நடவடிக்கை எடுப்பதற்கு அமெரிக்கா முன்மொழியும் என்று ஐ.நா. சபைக்கான அமெரிக்க தூதர் லிண்டா தோமஸ் கிரீன்பீல்டு தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் தடை விதிக்கப்பட்டுள்ள வட கொரிய அதிகாரிகள் 5 பேரில் ஒருவர் ரஷியாவில் உள்ளார். மற்ற 4 பேரும் சீனாவில் உள்ளார்கள் என தகவல்கள் கூறுகின்றன.

தடையை அடுத்து அமெரிக்க அதிகார வரம்புக்குள் இருக்கிற இந்த 5 பேரின் சொத்துக்களும் முடக்கப்படுகின்றன. அவர்கள் அமெரிக்காவில் தொழில் செய்ய முடியாது.

அத்துடன் அவர்களுடன் வர்த்தக தொடர்பு வைத்துக் கொள்ளுகிற தனிநபர்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் மீது அமெரிக்காவின் நடவடிக்கை பாயும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# கியூபாவிலும் வெனிசுலாவிலும் எங்கள் இராணுவத்தை குவிப்போம்

## ரஷ்யா அமெரிக்காவுக்கு எச்சரிக்கை



மொஸ்கோ, ஜன. 15

அமெரிக்காவுடனான பதற்றம் அதிகரித்தால் கியூபாவிலும் வெனிசுவேலாவிலும் படைகளை குவிப்போம் என ரஷ்யா எச்சரித்துள்ளது.

இதுகுறித்து ரஷ்யாவின் வெளியுறவுத்துறை இணையமைச்சர் செர்கெய் ரியப்கோவ் கூறுகையில்-

உக்ரைனையே சோவியத் ஒன்றியத்தில் அங்கம் வகித்த மற்ற நாடுகளையோ நேட்டோ அமைப்பு தன்னுடன் இணைத்துக் கொள்ளக் கூடாது என்று ரஷ்யா வலியுறுத்தி வருகிறது. அத்தகைய கூட்டுறவை ஏற்படுத்திக்கொள்ளப் போவதில்லை என்ற உத்தரவாதத்தை ரஷ்யா எதிர்பார்க்கிறது.

ஆனால், அவ்வாறு உத்தரவாதம் அளிக்க நேட்டோ அமைப்பும் அமெரிக்காவும் பிடிவாதமாக மறுத்து வருகின்றன.

அந்த வகையில், ரஷ்யாவுக்கும் நேட்டோவுக்கும் இடையிலான அணுகுமுறை எதிரும் புதிருமாக உள்ளது. எனவே, இரு தரப்பினருக்கும் இடையே நடைபெறும் பேச்சில் முன்னேற்றம் ஏற்படுவது சந்தேகத்துக்குரியதாகவே உள்ளது.

இந்த விவகாரத்தில் அமெரிக்கா மற்றும் நேட்டோவுடனான பதற்றம் தொடர்ந்து அதிகரித்தால், அதனை எதிர்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ரஷ்யா மேற்கொள்ளும்.

அந்த நடவடிக்கைகளில் ஒன்றாக, அமெரிக்காவுக்கு அருகே அமைந்துள்ள கியூபாவிலும் வெனிசுலாவிலும் ரஷ்யப் படைகளைக் குவிக்கப் படுவதற்கான வாய்ப்புகளையும் மறுக்க முடியாது - என்றார். (அ)

# சிரியாவின் முன்னாள் கேணலுக்கு ஆயுள் தண்டனை விதித்தது ஜேர்மன்!

பேர்லின், ஜன. 15

ஒரு தசாப்தத்துக்கு முன்னர் டமாஸ்கஸ் அருகே உள்ள சிறையில் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களைச் செய்ததற்காக, சிரியாவின் முன்னாள் இராணுவ கேணல் அன்வர் ரஸ்லானுக்கு ஜேர்மனி நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

கோப்லென்ஸில் உள்ள மாநில நீதிமன்றத்தின் நேற்று முன் தினம் வியாழக்கிழமை முக்கிய தீர்ப்பு சமூக ஆர்வலர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

பல ஆண்டுகளாக நடந்த போரின்போது ஜனாதிபதி பஷர் அல் - அசாத்தின் அரசாங்கத்தின் கைகளில் துஷ்பிரயோகத்துக்கு ஆளான எண்ணற்ற சிரியர்களுக்கு நீதிக்கான முதல் படியை இந்த தீர்ப்பு குறிக்கிறது.

கொலை, சித்திரவதை, மோசமான சுதந்திரம் பறித்தல், கற்பழிப்பு மற்றும் பாலியல் வன்கொடுமை ஆகிய குற்றங்களுக்காக கைதிக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

58 வயதான ரஸ்லான், சிரியாவில் நடந்த அட்டூழியங்களுக்காக விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட மிக உயர்ந்த பதவியில் உள்ள முன்னாள் இராணுவ அதிகாரி ஆவார். அத்துடன், சிரியாவில் அரசாங்கம் நடத்தும் சித்திரவதை தொடர்பாக உலகின் முதல் கிரிமினல் வழக்கு இதுவாகும்.

கடந்த 2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பருக்கிடையில் சிரிய தலைநகரில் உள்ள அல் - காதிப் சிறையில் 4,000 இற்கும் மேற்பட்டவர்களை முறையான மற்றும் கொடூரமான சித்திரவதைகளை ரஸ்லான் மேற்பார்வையிட்டார். இதன் விளைவாக குறைந்தது 58 பேர் கொல்லப்பட்டனர் என்று வழக்கறிஞர்கள் வாதிட்டனர்.

சிறைச்சாலையில் கற்பழிப்பு மற்றும் பாலியல் துஷ்பிரயோகம், மின்சார அதிர்ச்சி, முஷ்டி, கம்பிகள் மற்றும் சாட்டையால் அடித்தல் மற்றும் தூக்கமின்மை ஆகியவற்றை அவர் மேற்பார்வையிட்டார் என வழக்கறிஞர்கள் கூறுகின்றனர்.

2012ஆம் ஆண்டு தனது பதவியை விட்டு விலகி சிரியாவை விட்டு வெளியேறிய ரஸ்லான், 2014ஆம் ஆண்டு ஜேர்மனியில் தஞ்சம் புகுந்தார். அத்துடன் 2019ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

சிரிய ஜனாதிபதி அல்-அசாத்தின் கீழ் பணியாற்றிய ரஸ்லான், ஜனாதிபதியின் ஆட்சிக்கு எதிரான வெகுஜன அரசாங்க எதிர்ப்பு போராட்டங்களை கட்டுப்படுத்தினார். ரஸ்லான், சிரிய இரகசிய சேவைகளில் 18 ஆண்டுகள் பணியாற்றினார். அங்கு அவர் உள்நாட்டு உளவுத்துறை விசாரணை சேவையின் தலைவராக உயர்ந்தார். (அ)

## பிரான்ஸில் பூஸ்ரர் ஏற்றத் தவறியோரின்

# சுகாதார அட்டைகள் செயலிழக்கும் நிலை!



பாரிஸ், ஜன. 15

மூன்றாவது தடுப்பூசியை - பூஸ்டர் டோஸை - ஏற்றிக் கொள்ளத் தவறியவர்களின் சுகாதார அட்டைகள் இன்று சனிக்கிழமை முதல் செயலிழக்கத் தொடங்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்த சுகாதார அட்டை மூலமே ஒருவர் தனது மருத்துவம் சார்ந்த விடயங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியும். அது இல்லாவிட்டால் அவர் முழுமையான பணத்தை செலுத்தியே சேவையைப் பெறவேண்டும்.

சுகாதார அமைச்சின் தகவலின்படி சுமார் ஆறு இலட்சம் பேரின் சுகாதார அட்டைகள் செயலிழக்கும் என்பது தெரியவந்துள்ளது.

பிரான்ஸில் வளர்ந்தவர்கள் அனைவருக்கும் மூன்றாவது பூஸ்ரர் டோஸ் ஏற்றும் திட்டத்தை அரசு கடந்த நவம்பர் மாதம் அறிவித்தது. 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் உடலில் நோய் எதிர்ப்புக் குறைபாடு உடையவர்களுக்கும் முன்னுரிமைப்படி பூஸ்ரர் செலுத்துவது ஆரம்பிக்கப்பட்டது.

கடைசி ஊசி ஏற்றி ஏழு மாத காலத்துக்குள் பூஸ்ரர் ஊசியைப் பெறத் தவறுவோரது சுகாதார அட்டைகள் ஜனவரி 15 ஆம் திகதி தொடக்கம் படிப்படியாகச் செயலிழக்கும் என்பதையும் அரசு அறிவித்திருந்தது. அந்தக் காலக் கெடு இன்றாகும்.

பூஸ்ரர் டோஸ் ஏற்றுமாறு ஞாபகப் படுத்துகின்ற செய்திகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இரண்டாவது ஊசி ஏற்றிய பிறகு ஒருவர் வைரஸ் தொற்றுக்கு இலக்காகியிருந்தால் அத்தகையோர் தொற்றிலிருந்து மீண்டதை உறுதிப்படுத்தும் சான்றிதழை சமர்ப்பிப்பதன் மூலம் சுகாதாரப் அட்டை செயலிழப்பதைத் தாமதப் படுத்த முடியும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

**தடுப்பூசி அட்டைக்கு செனற் அங்கீகாரம்**

கடும் வாதப் பிரதிவாதங்களுக்குப் பின்னர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தடுப்பூசி அட்டைப் பிரேரணையை பாராளுமன்ற மேற்சபையாகிய செனற் சபையும் சில திருத்தங்களுடன் அங்கீகரித்துள்ளது. ஆனால் முக்கிய திருத்தங்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் செனற்றுக்கும் இடையே இன்னமும் இணக்கம் எட்டப்படவில்லை.

நாட்டில் தற்சமயம் பயன்பாட்டில் உள்ள சுகாதார அட்டையை தடுப்பூசி அட்டையாக மாற்றுவதற்கு அரசு தீர்மானித்திருப்பது தெரிந்ததே.

மருத்துவம் சார்ந்த இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களுக்குச் செல்வதற்கான அனுமதியை வழங்குகின்ற முக்கிய ஆவணமாகத் தடுப்பூசி அட்டை மாறவுள்ளது. அது நடைமுறைக்கு வந்த பின்னர், ஒருவர் தொற்றற்றவர் என்பதை நிரூபிப்பதற்கு வைரஸ் பரிசோதனை செய்த சான்றிதழ்கள் எதனையும் பயன்படுத்த முடியாது போகும். (அ)



# இந்தியா பரிதாபம்; தென்னாபிரிக்கா வலு!

கேப்டவுன், ஜன. 15

ரிஷப் பந்த் சதமடித்த போதும் இந்திய அணி 198 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதனால், தென்னாபிரிக்க அணிக்கு வெற்றி இலக்காக 212 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பதிலுக்கு துடுப்பெடுத்தாடி வரும் தென்னாபிரிக்க அணி மூன்றாம் நாள் ஆட்டம் முடிவில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டம் ஆரம்பமானபோது இந்திய 57 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்தநிலையில்,காணப்பட்டது. செதேஷ்வர் புஜாரா 9 ஓட்டங்களுடனும், விராட் கோலி 14 ஓட்டங்களுடனும் நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடினர்.

மூன்றாம் நாள் ஆட்டம் தொடங்கியபோது இரண்டாவது பந்திலேயே, புஜாரா மேலதிக ஓட்டம் எதையும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த ரஹானே ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழக்க கோலியுடன் இணைந்தார் ரிஷப் பந்த்.

ரிஷப் பந்த் தனது வழக்கமான பாணியிலேயே சற்று அதிராடியாக ஆட, அவருக்கு துணையாக மறுபுறத்தில் விக்கெட் விழாது காக்கும் விதமாக தற்காத்து ஆடினார் கோலி. 143 பந்துகளை சந்தித்த விராட் கோலி 29 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருக்க மறுமுனையில் அதிரடியாக அரைச்சதம் கடந்திருந்தார்.

எனினும் பின்னர் வந்த வீரர்கள் ரிஷப் பந்துக்கு துணை நிற்கவில்லை. அஸ்வின் 7, தாகூர் 5, உமேஷ் யாதவ் 0, முஹமட் ஷமி 0, பும்ரா 2 என வரிசையாக விழ, ரிஷப் பந்த் மட்டும் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களைப் பெற்று - டெஸ்ட் அரங்கில் நான்காவது சதத்தை தொட்டார்.

67.3 ஓவர்களில் 198 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் ஜான்சென் 4 விக்கெட்களையும், ரபாடா, நிகிடி ஆகியோர் தலா 3 விக்கெட்களையும் கைப்பற்றியிருந்தனர்.

தென்னாபிரிக்கா அணி முதல் இனிங்ஸில் 13 ஓட்டங்கள் பின்தங்கியிருந்த நிலையில், 212 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

அய்டன் மார்க்ரம் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற, டீன் எல்கர் - கீகன் பீற்றர்சன் இணை நிதானமாக ஆடியது. இந்த இணை மெதுவாக அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியது.

29.4 ஓவர்களில் 30 ஓட்டங்களைப் பெற்றிருந்த டீன் எல்கர் ஆட்டமிழக்கவே, மூன்றாம் நாள் ஆட்டமும் முடிவுக்கு வந்தது. அப்போது தென்னாபிரிக்க அணி 101 ஓட்டங்களுக்கு 2 விக்ககெட்களை மட்டுமே இழந்திருந்தது.

கீகன் பீற்றர்சன் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இந்தியாவின் பந்துவீச்சில் பும்ரா, ஷமி ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இந்தியா - தென்னாபிரிக்கா இடையே டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டி கேப்டவுனில் நடந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிட்னி சர்வதேச ரென்னிஸ் கிரிசிகோவா இறுதிக்கு தகுதி!



சிட்னி, ஜன. 14

செக் குடியரசின் ரென்னிஸ் வீராங்கனையான பார்போரா கிரிசிகோவா சிட்னி சர்வதேச ரென்னிஸ் போட்டியின் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றார்.

அவுஸ்திரேலியாவின் சிட்னியில் நடக்கும் இந்தத் தொடரில், முதல் அரையிறுதிப் போட்டியில் எஸ்தோனியாவின் கொன்ராவெல்ட்டை கிரிசிகோவாவை எதிர்கொண்டார்.

முதல் செற்றை கொன்ராவெலட் 6- 0 என்ற கணக்கில் இலகுவாக வெற்றி பெற்றார். ஆனால், எழுச்சி கண்ட கிரிசிகோவா இரண்டாவது செற்றை 6 - 4 என்ற கணக்கில் கைப்பற்றினார்.

தொடர்ந்து நடந்த மூன்றாவது செற்றில் 7 - 6 (14 - 12) என்ற கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றார். (ஐ)

# ஐ. பி. எல். ரி - 20 இந்தாண்டு தொடர் இலங்கையில்? தென்னாபிரிக்காவில்?

புதுடில்லி, ஜன. 15

இந்தியாவில் கொரோனா பாதிப்பு குறையாவிட்டால் ஐ. பி. எல். 2022 தொடரை இலங்கை அல்லது தென்னாபிரிக்காவில் நடத்த இந்திய கிரிக்கெட் சபை ஆலோசித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2021 ஐ. பி. எல். தொடர், கொரோனா தொற்று பாதிப்பால் அரைவாசி போட்டி இந்தியாவிலும் மிகுதி ஐக்கிய அரபு எமிரேட்ஸிலும் நடத்தப்பட்டன.

இந்த வருடமும் ஐ. பி. எல். தொடரை நடத்தவே இந்திய கிரிக்கெட் சபை விரும்புகிறது. ஆனால், அண்மை நாட்களாக அங்கு தொற்று பாதிப்பு உச்சம் பெற்றுள்ளது.

இந்த நிலையில், ஐ. பி. எல். தொடரை தென்னாபிரிக்காவில் நடத்த இந்திய கிரிக்கெட் சபை விரும்புகிறது. காரணம் அங்கு வீரர்களை தங்க வைப்பதில் இருக்கும் வசதி வாய்ப்புகள்தான்.

எனவே, கொரோனா தொற்று பாதிப்பால் ஐ. பி. எல். தொடரை இந்தியாவில் நடத்தமுடியாது போனால், தென்னாபிரிக்காவிலும், அங்கும் நடத்த முடியாத பட்சத்தில் இலங்கையிலும் நடத்தப்படலாம் என்று ஆலோசிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# சிம்பாப்வேயுடனான தொடர்; இலங்கை அணி அறிவிப்பு!

கொழும்பு, ஜன. 15

சிம்பாப்வேக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடருக்கான 18 பேர் கொண்ட ஒருநாள் அணியில் இருந்து அவிஷ்க பெர்னாண்டோ, ஜனித் லியனகே, கமில் மிஸ்ரா ஆகியோர் கோவிட்-19 வைரஸ் தொற்று காரணமாக நீக்கப்பட்டுள்ளனர்.

இதனால், ஆரம்பக் குழாமில் இடம்பெறாத தினேஷ் சந்திமால், குசல் மெண்டிஸ், நுவான் பிரதீப், ஷிரான் பெர்னாண்டோ, கமிந்து மெண்டிஸ் ஆகியோருக்கு போட்டியை பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தசூன் ஷானக தலைமையில் பெயரிடப்பட்ட இலங்கை அணியின் உப தலைவராக இருக்கும் தனஞ்சய டி சில்வா, அவரது மனைவி பிரசவம் காரணமாக மகப்பேறு விடுமுறையில் இருப்பதால் அவருக்கு பதிலாக கமிந்து மெண்டிஸ் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இலங்கை அணி - தசூன் ஷானக (தலைவர்), தினேஷ் சந்திமால்,, பத்தும் நிஸ்ஸங்க, மினோட் பானுக, சரித் அசலங்கா, குசல் மெண்டிஸ், நுவான் பிரதீப், ஷிரான் பெர்னாண்டோ, கமிந்து மெண்டிஸ், சமிக கருணாரத்ன, மகேஷ் தீக்ஷனா, ஜெப்ரி வான்டர்சிமென், நுவான் துஷார, ரமேஷ் மெண்டிஸ், பிரவீன் ஜெயவிக்ரம மற்றும் சமிக குணசேகர. (ஐ)

# மேற்கிந்தியாவுக்கு அதிர்ச்சி கொடுத்தது அயர்லாந்து அணி!

ஜமைக்கா, ஜன. 15

அயர்லாந்து அணியின் சகலதுறை வீரர் அன்டி மைக் பிரைன் 35 ஓட்டங்களை எடுத்து - 4 விக்கெட்களையும் எடுத்து அசத்த மேற்கிந்தியத் தீவுகள் அணியை டக்வேர்த் லூயிஸ் முறையில் 5 விக்கெட்களால் வெற்றி கொண்டது அயர்லாந்து அணி.

மேற்கிந்தியத்தீவுகள் சென்றுள்ள அயர்லாந்து அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. ஏற்கனவே ஒரு போட்டியை மேற்கிந்தியத் தீவுகள் வென்ற நிலையில், இரண்டாவது போட்டியில் இரு அணிகளும் நேற்று முன்தினம் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அயர்லாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 48 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது. முன்வரிசை வீரர்கள் சரியாக ஆடாத நிலையில் நடு, பின் வரிசை வீரர்களே அணிக்காக ஓட்டங்களைப் பெற்றனர்.

நான்காவது விக்கெட்டுக்காக இறங்கிய ப்றூக்ஸ் 43 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க, 9ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ரொமாரியோ ஷெப்பர்ட் 50, ஒடென் ஸ்மித் 46 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.


அயர்லாந்தின் பந்துவீச்சில் மைக் பிரைன் 4 விக்கெட்களையும், கிரைக் யங் 3, ஜோஸ் லிற்றில் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணிக்கு தொடக்கம் ஓரளவு வாய்ப்பாக அமைந்தது. வில்லியம் போர்ட்டர்பீல்ட் 26, பவுல் ஸ்ரிர்லிங் 21 ஓட்டங்களை எடுத்தனர். அடுத்து வந்த மைக் பிரைன் 35, காம்பர் 12, ஜோர்ஜ் டிக்வெல் 5 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தனர்.

31.2 ஓவர்களுக்கு 157 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்கள்களை அயர்லாந்து இழந்த நிலையில் மழை குறுக்கிட்டது. நீண்டநேரத்தின் பின்னர் போட்டி ஆரம்பமானபோது டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 36 ஓவர்களில் 168 ஓட்டங்கள் வெற்றி இலக்காக அயர்லாந்து அணிக்கு நிர்ணயிக்கப்பட்டது.

ஹரி ரெக்ரர் 54 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதிருந்தார். இதனால், 32.3 ஓவர்களில் அயர்லாந்து அணி 5 விக்கெட் இழப்புக்கு 168 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. மேற்கிந்தியத்தீவுகள் அணியின் அகில் ஹூசைன் 2 விக்கெட்களை கைப்பற்றினார்.

போட்டியின் நாயகனாக மைக் பிரைன் தெரிவானார். (ஐ)



# கொரோனா பூஸ்டர் மருந்தால் பக்கவிளைவு என்பது வதந்தி!

## மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம

கொழும்பு, ஜன. 15

கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கான பூஸ்டர் மருந்து பல்வேறு பக்கவிளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பது வதந்திகள்- கட்டுக்கதைகள் என்றும் அதில் எந்த உண்மையும் இல்லை என்றும் தேசிய தொற்று நோய்கள் நிறுவகத்தின் மருத்துவர் ஆனந்த விஜே விக்ரம தெரிவித்தார்.

தடுப்பூசி காரணமாக எந்த நோயாளிக்கும் பக்கவாதம், ஆண்மைக்குறைவு அல்லது பிற பக்க விளைவுகள் இருப்பதாக கண்டறியப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

தடுப்பூசி போட்ட பிறகு சில நோய்கள் ஏற்பட்டதாக சிலர் கூறினாலும், தடுப்பூசியால் அவை ஏற்படவில்லை என்பது தெரியவருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா நோய்த்தொற்றுக்குப் பிறகு சில காலத்துக்கு ஆண்மைக்குறைவு ஏற்படலாம் என்றாலும், அது நீண்ட காலத்துக்கு அல்ல என்றும் அவர் கூறினார். (அ)



# யாழில் இந்து - பௌத்த பொங்கல் விழா!

**யாழ்ப்பாணம், ஜன. 15**

**சர்வதேச இந்து - பௌத்த ஒற்றுமைக்கான அமைப்பு, யாழ். நண்பர்கள் அமைப்பு என்பன இணைந்து நடத்திய பொங்கல் விழா நேற்றுயாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.**

நேற்றுக் காலை 10 மணியளவில் நல்லை ஆதின மண்டபத்துக்கு முன்பாக இடம்பெற்ற பொங்கல் விழாவுக்கு விருந்தினர்கள் நல்லூர் ஆலயத்திற்கு முன்பாக இருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

இதன்போது பல்வேறு கலாசாரங்களை பிரதிபலிக்கும் வகையில் கண்டிய நடனம், பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம், நாதஸ்வர - மேளதாளங்கள் முழங்க விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.

இந்நிகழ்வின்போது பொங்கல் பானையில் விருந்தினர்களால் அரிசி போடப்பட்டதுடன், மங்கள விளக்கேற்றல் நிகழ்வு பௌத்த பாரம்பரிய முறைப்படி கண்டிய நடன மற்றும் மேளதாளங்கள் முழங்க நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, நாகவிகாரை விகாராதிபதி சிறீவிமல தேரர், நல்லை ஆதீன குருமுதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், மறவன் புலவு சச்சிதானந்தன், யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் மற்றும் மதத்தலைவர்கள் இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வுகளின்போது இராணுவம் மற்றும் பொலிஸாரால் பலத்த பாதுகாப்பு கெடுபிடிகள் காணப்பட்டன. இதனால் பல ஆசனங்கள் வெறுமையாகவே இருந்தன. (ஐ )

# தேவாலயத்தில் கைக்குண்டு 14 பேரிடம் வாக்குமூலங்கள்!

## பொலிஸ் மா அதிபர் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 15

பொரளை சகல பரிசுத்தவான்கள் தேவாலயத்தில் கைகுண்டுகள் மீட்கப்பட்டமை தொடர்பிலான விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை. இதுவரை 14 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள பொலிஸ்மா அதிபர், சம்பவத்துடன் தொடர்புடைய சகல நபர்களுக்கு எதிராக தகுதி தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பொரளை பொலிஸாரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் தற்சயம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தேவாலய வளாகத்தை அண்மித்த பகுதிகளில் இருந்து பெறப்பட்ட சி. சி. ரீ. வி காட்சிகள் சட்டத்திற்கு உட்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், ஆதாரங்கள் பதிவு செய்யும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் இதுவரை 14 வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முறைகள் நிபுணர்கள் மற்றும் நிபுணர்களின் ஆதரவுடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸ் மா அதிபர் விக்கிரமரத்ன மேலும் கூறினார். (ஐ)

# இலங்கைக்கு இது சவாலான வருடம்

## ஐ.நா. அறிக்கையில் தெரிவிப்பு

நியூயோர்க், ஜன. 15

கொரோனா வைரஸ் காரணமாக இலங்கை பல சவால்களை இந்த வருடம் எதிர்கொள்ளும் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

இலங்கை உணவுப்பற்றாக்குறை அந்நிய செலாவணி நெருக்கடி கடன் ஆபத்துக்கள் போன்றவற்றை எதிர்கொள்ளும் என ஐ.நாவின் அறிக்கை தெரிவித்துள்ளது.

2022 உலக பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள் குறித்த அறிக்கையிலேயே இலங்கை குறித்து இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்களுக்கான திணைக்களத்தின் இந்த அறிக்கையில்-

ஒன்றுடன் ஒன்று கலந்த பல பிரச்னைகள் உலகின் பொருளாதார வளர்ச்சி வேகத்தை குறைக்கின்றன.

2022 இல் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2.6 ஆக காணப்படும். இலங்கையின் முக்கிய சவால்களாக உணவுத் தட்டுப்பாடு, வெளிநாட்டு நாணயக் கையிருப்பு குறைதல் மற்றும் கடன் ஆகியன காணப்படும்.

இலங்கை, பாகிஸ்தானின் மத்திய வங்கிகள் அதிகரித்து வரும் பணவீக்கம், விரிவடையும் நடப்பு கணக்கு பற்றாக்குறைகளுக்கு மத்தியில் வட்டி வீதத்தை அதிகரித்துள் ளன.

மத்திய வங்கிகள் அனைத்தையும் உள்ளடக்கிய மீள் எழுச்சி மற்றும் விலை ஸ்திரத் தன்மையை பேணுவதற்காக கொள்கை மாற்றங்களின் தருணங்கள் மற்றும் அளவுகள் குறித்து மதிப்பீடு செய்ய வேண்டும். தெற்காசியா பாரிய பின்னடைவு ஆபத்தை எதிர் கொள்கின்றது-என்றுள்ளது. (அ)

# கலைகளின் வெளிப்பாடுமூலமே எமது இருப்பை நிலைநிறுத்தலாம்!

கிளிநொச்சி, ஜன. 15

பண்பாடுகள், கலைகளின் வெளிப்பாடுகள் மூலமே எமது இருப்பை நிலைநிறுத்திக் கொள்ள முடியும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

மருத்துவர் ஆர். வீ. சசிகரனின் படைப்பில் உருவான உனக்கும் ‘உதிரம்தானே’ குறும்பட இறுவெட்டு வெளியிட்டு வைக்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ் அரசுக் கட்சி அலுவலகமான அறிவகத்தில் நடைபெற்றது. இதில், கலந்து கொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “இன்று சமூகத்தில் தலைதூக்கி இருக்கின்ற போதைப் பொருள் பாவனை மற்றும் விபத்துக்கள் மேலும் சமூகத்தில் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கின்றது. எங்களுடைய சமுதாயம் படுகின்ற பல துன்ப நிலைகளையும் கடந்து இவ்வாறான கலைப் படைப்புக்கள் வெளிவருகின்றன.

தொடர்ந்தும் தடைகளையும் இடர்களையும் சந்திக்கின்றோம் அதிலும் போதைவஸ்து பாவனை என்ற பெரிய சவாலும் காணப்படுகின்றது. இதனை எவ்வாறு எதிர்கொள்வது? ’சமூகத்தை எவ்வாறு காப்பது? என்பது பற்றி சிந்திக்க கூடிய வகையிலே மருத்துவர் சசிதரனின் படைப்பு உருவாகியிருக்கிறது. இவ்வாறான படைப்புக்கள் இளம் சமூத்திடம் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் பண்பாடுகள் கலைகளின் வெளிப்பாடுகள்மூலமே தமது இருப்பை நிலைநிறுத்திக் கொள்ள முடியும் - என்றார். (ஐ)

# 2021 பேருக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஜன. 15

மேல் மாகாணத்தில் உரிய முறையில் முகக் கவசம் அணியத் தவறிய குற்றத்துக்காக நேற்று முன்தினம் 2 ஆயிரத்து 21 பேரை பொலிஸார் எச்சரிக்கை செய்து விடுத்தனர்.

1,008 போக்குவரத்து பொலிஸார் நேற்று முன்தினம் மேல் மாகாணத்தில் முன்னெடுத்த விசேட சோதனையின் போதே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதன்போது 4,023 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 3,564 முச்சக்கர வண்டிகளில் பயணித்த 10, 248 நபர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஓட்டோவை செலுத்திய தாயாரே தனது குழந்தைக்கு எமனானார்

பதுளை, ஜன. 15

பதுளை - பசறை பிரதான வீதியின் ஐந்தாம் கட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை முச்சக்கரவண்டி தடம்புரண்டதில் 8 மாத குழந்தை உயிரிழந்தது.

முச்சக்கர வண்டியைக் குழந்தையின் தாயாரே செலுத்தினார் என்றும், அவருக்கு சாரதி அனுமதிப் பத்திரம் இல்லை எனவும் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் சம்பவத்தில் முச்சக்கர வண்டியை ஓட்டிய தாயரும், அதில் பயணித்த ஆண் ஒருவருமாக இருவர் பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

## தேவாலயங்களில்...

பேராயர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

பொரளை - ஆனந்த ராஜகருணா மாவத்தையில் அமைந்துள்ள சகல பரிசுத்தவான்கள் தேவாலயத்தில் கடந்த செவ்வாயன்று கைகுண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் , தேவாலயத்தில் தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள நபர் உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் அன்றைய தினம் காலை முதல் பதிவாகிய சி. சி. ரீ. வி. காணொலியை நாம் கண்காணித்தோம். எனினும், பொலிஸார் அவற்றை கண்காணிப்பதில் ஆர்வம் செலுத்தவில்லை. காலை முதல் கண்காணித்த சி. சி. ரீ. வி. காணொலிகளில் காலை 9.52 மணியளவில் நபரொருவர் பொலித்தீன் பையொன் றுடன் தேவாலயத்திற்குள் நுழையும் காட்சி பதிவாகியுள்ளது.

குறித்த நபர் தேவாலயத்திற்குள் நுழைந்ததன் பின்னர் செய்த வழிபாட்டு முறைகள் தவறாகக் காணப்பட்டன. அவற்றிலிருந்தே அவர் ஒரு கத்தோலிக்கர் அல்ல என்பது தெளிவாகிறது. அதன் பின்னர் இறுதி ஆசனத்திற்குப் பின்னால் சென்று கீழே குனிந்து அவர் ஏதோ செய்து கொண்டிருக்கின்றார். பின்னர் தேவாலயத்தை தூய்மைப்படுத்தும் நபரொருவர் அவருக்கு அருகில் சென்றதும் , குறித்த நபர் கலவரமடைந்து அங்கிருந்து வேகமாக வெளியேறுகின்றார். இவ்வாறு பதிவான காணொலி பொலிஸாரால் கண்காணிக்கப்படவில்லை.

இதனையடுத்து பிற்பகல் 3 மணிக்கு பின்னர் பதிவான சி. சி. ரீ. வி. காணொலியில் தேவாலயத்தை தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நபர் அங்கு நிலத்தில் காணப்பட்ட பொருளொன்றை மேசையின் மேற்பகுதியில் எடுத்து வைக்கின்றார். அதன் பின்னர்தான் குறித்த நபர் அந்தப் பொருள் குண்டு என்பதை அறிகிறார். இதனால் அவர் அதிர்ச்சியடைந்து அதனைப் பார்த்துக் கொண்டிருப்பதும் , பின்னர் தேவாலயத்தில் உள்ள ஏனைய ஊழியர் ஒருவரிடமும் அருட்தந்தைகளிடமும் இது தொடர்பில் தெரிவிக்கின்றார்.

இந்த நபரையே பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த நபர் அந்த இடத்தில் கைகுண்டை வைத்திருந்தால் அவர் எவ்வாறு அதனை கைகளால் எடுத்திருப்பார்? ஏன் அதனைக் கண்டு ஆச்சரியம் அடைகிறார்? எதற்காக ஏனையோருக்கு அது தொடர்பில் அறிவித்தார்? பொலிஸார் இந்த காரணிகள் எவற்றைப் பற்றியும் கவனத்தில் கொள்ளவில்லை. மாலை 3 மணிக்கு பின்னர் பதிவான காணொலிகளை மாத்திரமே பொலிஸார் கண்காணித்துள்ளனர்.

காலையில் தேவாலயத்திற்கு வருகை தந்து குண்டை வைத்துச் சென்ற நபர் யார் என்பது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்காமல் , தேவாலயத்தில் தூய்மைப்படுத்தல் பணிகளில் ஈடுபட்டிருந்த நபரையே பொலிஸார் கைது செய்துள்ளனர். அவரின் சட்டைப் பையில் தீப்பெட்டி காணப்பட்டதாகவும் , அதில் தீக்குச்சிகளின் எண்ணிக்கை குறைவடைந்திருந்ததாகவும் பொலிஸார் கூறுகின்றனர். இது உண்மைகளை கண்டறிவதை விடுத்து போலியான கதைகளை உருவாக்குவதும் , நாடகமொன்றை அரங்கேற்றும் செயல்பாடுமாகும்.

பொலிஸாரின் இந்த அசமந்த செயல்பாட்டை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். இந்த சம்பவம் தொடர்பில் உண்மையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன் பின்னணியில் உள்ள சதித்திட்டத்தை மறைப்பதற்கு அப்பாவி மக்களின் உயிரைப் பணயம் வைப்பதற்கு அனுமதிக்க முடியாது. இந்த சம்பவத்தின் பின்ன ணியிலும் சதித்திட்டம் காணப்படு கிறதா என்ற சந்தேகம் எழுகிறது - என்றார். (ஐ)

## இந்த ஆட்சி...

கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சி ஏற்கனவே கவிழ்ந்து விட்டதாகவே கருதுகின்றேன். இன்று ஆட்சியாளர்கள் இருப்பதாக தெரியவில்லை, ஆனால் இருப்பதாக சொல்லி நாட்டைமென்மேலும் ஒரு இருண்ட யுகத்துக்குள்ளே கொண்டு வருகின்றவர்கள், அகற்றப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. தென்னிலங்கையிலே இதற்கான எதிர்ப்புப் போராட்டங்கள் ஆரம்பமாகியிருக்கின்றன.

மக்களாக இந்தப் போராட்டங்களை நடத்துகிறார்கள், அரசியல் தலைவர்கள் முன்வந்து இந்த மாற்றத்தை செய்வோம் என எதிர்பாரக்கின்றோம்-என்றார்.

மேற்படி பொங்கல் நிகழ்வு காலை 8:00 மணிக்கு ஆரம்பமாகியது.இந்த நிகழ்வில் வடமராட்சி தெற்கு மேற்க்கு பிரதேச சபை தவிசாளர் ஐங்கரன், முன்னாள் மாகணசபை உறுப்பினர் ச.சுகிர்தன், இளைஞர் அணி செயற்பாட்டாளர் தயாபரன் மற்றும் நிர்வாகிகள், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.தியாகலிங்கம் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (அ-02)

## எரிபொருள்...

உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய எரிபொருள் நிலைமை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் விநியோகத்தை விடவும் எரிபொருளுக்கான பணத்தை செலுத்துவதிலேயே பிரச்னை உள்ளது.

வரும் எரிபொருள் கப்பல்கள் 7, 8 நாட்களாக எரிபொருளை இறக்க முடியாத நிலைமையில் இருக்கின்றன.

வங்கிக் கடன் பத்திரங்கள் இன்றி எரிபொருள் கப்பல்களை கொண்டு வந்தாலும் அவற்றுக்குத் தேவையான டொலர்களை சேர்த்துக்கொள்ளும்வரை குறித்த எரிபொருள் அடங்கிய கப்பல்களை துறைமுகத்தில் நிறுத்திவைக்க வேண்டி நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அத்துடன் டொலர் பிரச்னையை கட்டுப்படுத்திக்கொள்ள நாங்கள் சீனாவிடம் 300 மில்லியன் டொலர் கடனை பெற்றோம். இந்தியாவிடம் 400 மில்லியன் டொலரை பெற்றோம்.

பங்களாதேஷிடம் 250 மில்லியன் டொலரை பெற்றோம். ஆனால் அவை அனைத்தும் ஒரு மாதத்துக்கு எரிபொருளை கொண்டு வர போதுமானது அல்ல. ஒருமாதத்துக்கு எரிபொருள் கொண்டுவர 400மில்லியன் டொலர் தேவைப்படுகின்றது.

இந்நிலையில் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நெருக்கடி நிலைமையில் எரிபொருள் தொடர்பில் நான் இதற்கு முன்னர் உறுதிமொழி வழங்கியதுபோல் தற்போது என்னால் வழங்க முடியாது.

அதற்காக அவசரமாக சென்று எரிபொருளை நிரப்பிக்கொள்ள வேண்டியதில்லை. எதிர்வரும் தினங்களுக்கு தேவையான எரிபொருள் இருக்கின்றது. எரிபொருள் முடியும் நிலையிலேயே இறக்குமதி செய்யப்படுகின்றது.

அதனால் ஜனவரியில் எவ்வேளையும் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படக்கூடிய அபாயம் இருக்கின்றது.

ஆனால் அந்த அபாயம் உருவாக முன்னர் அது தொடர்பில் மக்களுக்கு அறிவிக்க எதிர்பார்க்கின்றேன். அதற்காக தட்டுப்பாடு ஏற்படும்வரை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கமாட்டோம்.

அதற்கு தேவையான முடியுமான முயற்சிகளை மேற்கொள்வோம்.

ஜனவரிக்கு பின்னர் ஏதாவது நடவடிக்கை எடுக்கலாம். ஏனெனில் பெப்ரவரியில் ஒரு சில நாடுகளில் நாள் கடன் வசதிகளை கேட்டிருக்கின்றேன். எனினும் ஜனவரி அவதானமிக்கதாகும்-என்றார். (அ)

# கடலில் நீந்தச் சென்ற இரு சிறுவர்கள் மாயம்!

## கிரானில் நேற்று அனர்த்தம்

மட்டக்களப்பு, ஜன. 14

7 நண்பர்கள் நீந்துவதற்காக வாழைச்சேனை-கிரான் - நாகவத்தை கடற்பகுதியில் குளிக்கச் சென்ற சிறுவர்கள் இருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர்.

மூவர் காணாமல் போன நிலையில் ஒரு சிறுவன் மட்டும் காப்பாற்றப்பட்டு வாழைச்சேனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் 1.30 மணியளவில் குறித்த சிறுவர்கள் நாகவத்தை கடற்பகுதியில் நீந்தச் சென்றபோதே இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

காணாமற்போன சிறுவர்கள் இருவரையும் வாழைச்சேனை பொலிஸாரும் பிரதேச மக்களும் இணைந்து தேடி வருகின்றனர். அத்துடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பொருளாதார...

இலங்கையில் அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடியின் மத்தியில், சட்டவாட்சி, ஜனநாயகம் மற்றும் மக்களின் வாழ்வியலில் ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பில் தாம் தீவிர கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

பணவீக்க அதிகரிப்பு, சமையல் எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு, கையிருப்பு தட்டுப்பாடு, வெளிநாட்டவர்களுக்கு பணம் அனுப்ப முடியாமை, கடன் தரப்படுத்தலில் இலங்கை பின்தள்ளப்பட்டமை, சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டமை, சில விமான நிலையங்களுக்கான நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டமை குறித்து வெளியாகும் தகவல்கள் மற்றும் மின்சார நெருக்கடியால் ஏற்பட முடியுமான பாதிப்புகளினால் இந்த அவசர தேவை உணரப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தின் இவ்வாறான பின்னடைவு பெரும்பாலும் நாட்டின் சட்டவாட்சிக்கும் நிர்வாகத்துக்கும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு மூன்று பில்லியன் டொலராக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளபோதிலும் அதில் எவ்வளவு தொகையை பயன்படுத்த முடியும் என்பதனை ஆராய வேண்டும்.

தொற்றுநோய் நிலைமையினால் அரசாங்கம் சவால்களை எதிர்நோக்கியுள்ளது என்பதனை ஏற்றுக்கொள்கிறோம்.

அந்த சவால்களுக்கு முகங்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு நிலையான தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவான தொழில்நுட்ப விசேட நிபுணத்துவம் பெற்ற உள்நாட்டு, சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சுயாதீன மற்றும் பக்கசார்பற்ற நிபுணர்கள், நிறுவனங்களின் உதவியை பெற்றுக் கொள்ளவேண்டும்-என்றுள்ளது. (அ)

## வவுனியா...

யில் நிறுத்தப்பட்டிருந்த பாரவூர்தியுடன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பேருந்தொன்று மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது, மற்றோர் அதிசொகுசு பேருந்தும் மோதியது

இந்த சம்பவத்தில் காயமடைந்த 12 பேர் வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தை அடுத்துக் குறித்த பகுதியில் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## தளபதி...

வேண்டும் என்றும் அந்த அமைப்புக்கள் கூறியுள்ளன.

மேலும், பிரித்தானியாவின் பேர்மிங்ஹாமில் இந்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியில் பங்கேற்பதற்கு முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரிய தனது அணியுடன் பிரித்தானியாவிற்கு வருகை தரும்பட்சத்தில், சர்வதேச சட்டவரம்பின் கீழ் அவரைக் கைதுசெய்து விசாரணையை ஆரம்பிப்பதே தற்போது பிரித்தானியா செய்யக் கூடிய மிகக்குறைந்தபட்ச நடவடிக்கை.

மேலும், இலங்கையின் இறுதிகட்ட போரின்போது நிகழ்ந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய கட்டளை வழங்கும் அதிகாரத்திலிருந்த இராணுவ ஜெனரல்களுக்கு எதிராக பிரிட்டன் அரசாங்கம் தடை விதிக்க வேண்டும்.

இவ்வாறு, சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயல்திட்டம், பேர்ள் அமைப்பு, தொழிற்கட்சிக்கு ஆதரவான தமிழர்கள், பிரித்தானிய தமிழ் பழமைவாதிகள் அமைப்பு, ஸ்ரீலங்கா கம்பெய்ன் அமைப்பு, தடை விதிப்பதற்கான தமிழர்கள், சுதந்திர ஜனநாயகவாதிகளின் தமிழ் நண்பர்கள் ஆகிய 7 சர்வதேச மற்றும் பிரிட்டன் மனித உரிமைகள் அமைப்புக்கள் இணைந்து கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கொரோனா...

தினை முன்னெடுத்துள்ளோம்.

எனவே, இந்த விடுமுறை நாட்களைப் பயன்படுத்திக் கொண்டு சகலரும் விரைந்து தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறில்லை எனில் கோவிட் அச்சுறுத்தலிலிருந்து மீள்வது கடினமாகும் - என்றார். (ஐ)

## உழவு இயந்திரம்...

பிள்ளைகளின் தந்தையான சின்னதம்பி தெய்வேந்திரன் என அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள அதே வேளை மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-03)

## மாதகல் பஸ்...

உரிமையாளரான அவர் மூன்று நாள்களாக காணாமற்போயிருந்தார் என்று இளவாலை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அவரது சடலம் நேற்று பிற்பகல் சங்கானை மண்டிகைக்குளத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-03)

## ரயில்நிலைய...

துள்ளது.

ரயில் நிலைய அதிபர்கள் நேற்று பிற்பகல் காலவரையற்ற தொழிற்சங்கப் போராட்டத்தை அறிவித்தனர்.

சங்கத்தின் துணைத் தலைவரை பணிநீக்கம் செய்ய ரயில்வே நிர்வாகம் எடுத்ததாகக் கூறப்படும் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த வேலைநிறுத்தம் தொடங்கப்பட்டது.

ரயில்வே அதிகாரிகளின் சில நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பல மணிநேரம் தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu

## மரண அறிவித்தல்



தோற்றம் 16 - 05 - 1948

மறைவு 12 - 01 - 2022

### திருமதி நவரட்ணம் மகேஸ்வரி (மணி)

யாழ். புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Homburg ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நவரட்ணம் மகேஸ்வரி அவர்கள் 12.01.2022 புதன்கிழமை அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான ஏரம்பு - செல்லம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை(சின்னத்தம்பி) - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற நவரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், திருமாறன், சுதர்சினி, துளசிமாறன், சத்தியகாந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும்,காலஞ்சென்ற தனபாலசிங்கம், சிவஞானேஸ்வரி (முடவநெ- கிளி), செல்வராசா, நடேசமூர்த்தி, இராஜேஸ்வரி, கோணேஸ்வரி, விக்கினேஸ்வரி, கிருஷ்ணசிங்கம்(கோமான்), திருவருட்செல்வன் (திருவாசகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும்,யோகம்மா, சிற்றம்பலம், நாகரெத்தினம், வசுந்திரா, தேவநாயகம், சிவநாதன், சண்முகலிங்கம், பானுமதி, துளசினி, காலஞ்சென்ற(தில்லைநாதன்), தனலெட்சுமி, திருநாவுக்கரசு (குணபூசணி), சின்னக்கிளி(பேரம்பலம்), தர்மலிங்கம் (மகேஸ்வரி), இராமச்சந்திரன் (மகேஸ்வரி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், மனோன்மனி, பூமணி, செந்தில்மணி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், கிரியா, உதயகுமார், சிந்து ஆகியோரின் அன்பு மாமியும், துஷ்யா, ரிஷான், ரிஷி, ஜனனி, சந்தோஷ், ஜசீதா, தீபனா, தனுஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கணணையா - சீதேவி, கணபதிப்பிள்ளை- சந்திராணி, விஜயரெத்தினம் - ஜெயமதி தம்பதியரின் அன்புச் சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை 20.01.2022 வியாழக்கிழமை அன்று பி.ப 01:00 மணியளவில் நடைபெறும். பார்வைக்கு நேரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**நடேசமூர்த்தி (சகோதரன்)**
+4917630494902



ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்ற 1000ஆவது நாள் நினைவேந்தலும் பிரார்த்தனையும் நேற்று கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்றவேளை...!

## வடமராட்சியில் இம்முறை சோபை இழந்தது பொங்கல்

*யாழ்ப்பாணம், ஜன. 15*

கொரோனா தொற்று மற்றும் வருமானம் இன்மை காரணமாக வடமராட்சிப் பகுதியில் இம்முறை தைப்பொங்கல் தினம் வழமையை விட சோபை இழந்து காணப்பட்டது.

வடமராட்சி பகுதியில் வழமையாக இடம்பெறும் பட்டம் விடுதல் நிகழ்வு காற்றும் இன்மை காரணமாக இடம்பெறவில்லை. வான்வெளி எங்கும் பட்டம் இன்மையாக காணப்பட்டது.

இதைவிட வீதிகள் எல்லாம் வெறிச்சோடிக் காணப்பட்டன. ஆலயங்களில் மக்கள் கூட்டம் மிக குறைவாக காணப்பட்டது. வழமையை விட இம்முறை வடமராட்சிப் பகுதியில் தைப்பொங்கல் தினம் சோபை இழந்து காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-02)



## பாலைமரக்குற்றிகளை கடத்தியவர் சிக்கினார்

*முல்லைத்தீவு, ஜன. 15*

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு உடையார் காட்டுப்பகுதியிலிருந்து கனரக வாகனத்தில் அதிகளவான பாலைமரக்குற்றிகளை ஏற்றிக்

கடத்திச்செல்ல முற்பட்டவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நேற்றுக் காலை உடையார்கட்டு தெற்கு பகுதியில் சுமார் 5 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதி கொண்ட அறுத்த பாலை மரக்குற்றிகளை கனரக வாகனத்தில் ஏற்றி அதன் மேல்சல்லிக்கல்லுகள் ஏற்றப்பட்டுக் கடத்தப்படுவதாகப் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு இரகசிய தகவல் கிடைக்கப் பெற்றது.

குறித்த தகவலுக்கு அமையப்புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையக் குழு ஒன்று சென்று குறித்த கனரக வாகனத்தைப் பிடித்ததுடன் சாரதியைக் கைது செய்தது.

சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் இவ்வாறான கடத்தல் சம்பவம் இடம்பெற்று வருவதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விசுவமடு பகுதியைச் சேர்ந்த கனரக வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், கனரக வாகனம் மரக்குற்றிகளுடன் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. (அ)

## கொரோனா தோற்றால் மேலும் 16 பேர் மரணம்!

*கொழும்பு, ஜன. 15*

நாட்டில் நேற்று முன்தினம் கோவிட் தொற்றால் 16 பேர் உயிரிழந்துள்ளனர். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15,190 ஆக அதிகரித்துள்ளது. (அ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 16 - 11 - 1961

மறைவு 11 - 01 - 2022

### வாசுதேவன் மகாதேவன்
**(கொழும்பு இந்துக் கல்லூரி பழைய மாணவர்)**

கொழும்பைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வதிவிடமாகவும் கொண்ட வாசுதேவன் மகாதேவன் அவர்கள் 11.01.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மகாதேவன் - திலகவதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், முத்திலிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், உதயனி அவர்களின் அன்புக் கணவரும்,கேஷனா, கௌஷிகன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,குமரதேவன், சுமதி, கங்கதேவன், சுகுணதேவன், காலஞ்சென்ற கைலதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வதனி, பாஸ்கரன், லீலாவதி, தர்மினி, கோமதி, நிரஞ்சனி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,அரவிந்தன் அவர்களின் அன்புச் சகலனும் ஆவார்.

*பார்வைக்கு :*
Saturday, 15 Jan 2022 1:30 PM - 4:30 PM
Sunday, 16 Jan 2022 2:00 PM - 3:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*கிரியை :*
Sunday, 16 Jan 2022 3:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*தகனம் :*
Sunday, 16 Jan 2022 5:30 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**உதயனி - மனைவி**
**Mobile : +14168908484**

தகவல்:
**குடும்பத்தினர்.**







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

காலை
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

பகல்
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : WEEK END MOVIE- சண்டைக்கோழி
4.30 மணி : மனிதனின் மறுபக்கம்



5.00 மணி : கோலிவூட் சுப்பர்
6.00 மணி : எதுசரி எதுபிழை

இரவு
7.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு
7.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி: டான் பட்டிமன்றம்



10.00 மணி : நெற்றிக்கண்



காலை
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

பகல்
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

இரவு
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

காலை
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

பகல்
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

இரவு
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

காலை
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

பகல்
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

இரவு
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

காலை
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

பகல்
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

இரவு
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

காலை
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

பகல்
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

காலை
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

பகல்
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

இரவு
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு